NLB 50 Anniversary

ජාතික ලොතරැයි මණ්ඩලය

தேசிய லொத்தர் சபை

NATIONAL LOTTERIES BOARD

# Unassuming Journey

වාර්ෂික වාර්තාව

ஆண்டறிக்கை

Annual Report

2013

தேசிய லொத்தர் சபை 50ஆவது ஆண்டு நிறைவு

## நிறுவனத்தின் பெயர்
தேசிய லொத்தர் சபை

## சட்ட வடிவம்
1963ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க ஆஸ்பத்திரி லொத்தர்கள் நீக்கப்பட்டதன் பின்னர் தேசிய லொத்தர் சபை (தே.லொ.ச) உருவாக்கப்பட்டது. 1997 ஆம் ஆண்டின் 35ஆம் இலக்கத் (திருத்தச்) சட்டத்தின் மூலம் மேற்படி சட்டத்தின் சில விதிகள் 1997இல் நீக்கப்பட்டுத் திருத்தங்கள் செய்யப்பட்டன.

## தாபிக்கப்பட்ட ஆண்டு
1963

## நிதியாண்டின் முடிவு
டிசம்பர் 31

## பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்
முகவரி: இல.234/2, காலி வீதி, கொழும்பு 03.

## தொலைபேசி
2470670, 2470663, 4607000, 4716990-2

## தொலைநகல்
2421897, 2326528, 2433631, 2470661

## மின்னஞ்சல்
nlbgen@sltnet.lk

## இணையதளம்
www.nlb.lk

## கணக்காய்வாளர்கள்
கணக்காய்வாளர் தலைமை அதிபதி,
கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களம்,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.

## வங்கியாளர்கள்
மக்கள் வங்கி

# உள்ளடக்கம்

## மேலோட்டம்


கூட்டாண்மைத் தகவல்கள் மற்றும் வழிகாட்டல் கோட்பாடுகள் 05
மதிப்பிடமுடியா பயணம் 16
உற்பத்தி வரிசை 19


## முகாமைத்துவத்தின் அறிக்கைகள்


தலைவரின் மீளாய்வு 25
தொழிற்படும் பணிப்பாளரின் அறிக்கை 31
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் அறிக்கை 35


## நிதிக் கூற்றுகள் மற்றும் தகவல்கள்


கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 37
வருமானக் கூற்று 47
நிதிக்கூற்றுகளும் தகவல்களும் 49
நிதி நிலைமைக் கூற்று 51
நிதிப் பாய்ச்சல் கூற்று 53
உரிமை முதலிலான மாற்றங்கள் 55
கணக்கீடுகளுக்கான குறிப்புகள் 57


## செயற்பாட்டு நிதி மீளாய்வு


நிதியியல் சிறப்பம்சங்கள் 75
மொத்தச் செயற்பாடு 77
உற்பத்தி ரீதியான செயற்பாடு 81
சிறப்பு நிகழ்வுகள் - 2013 89
பத்தாண்டு கால செயற்பாடுகள் 97



# வழிகாட்டல்

## கோட்பாடுகள்



# தொலைநோக்கு

"நாட்டின் சமூக - பொருளாதார அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு அனைத்து சமூகத்தினரதும் பங்களிப்புடன் தேசிய முதலீட்டை உருவாக்குவதில் முதன்மை வகித்தல்"

# பணி இலக்கு

தேர்ச்சியும் அர்ப்பணிப்பும் மிக்க ஊழியர்களோடு, நவீன தொழினுட்பத்தின் துணை கொண்டு புதிய லொத்தர்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்து, அவர்களது நம்பிக்கையை வென்று, அற்புதமான நாடொன்றை நோக்கிப் பயணிக்கின்ற சமூகப் பொறுப்புமிக்க நிறுவனமாதல்.

## நிறுவனத்தின் இலக்குகள்

- அரசாங்கத்தின் அபிவிருத்தித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான நிதியை உருவாக்குதல்.
- அரசாங்கத்திற்கு வருமானத்தை ஈட்டிக்கொடுக்கும் நிறுவனங்களிடையே முதன்மை நிறுவனமாதல்.
- மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்.
- நாட்டின் வேலை வழங்கலுக்குப் பங்களிப்புச் செய்தல்.

## சபையின் நோக்கங்கள்

- தற்போதைய வருமானம் மற்றும் இலாபமீட்டல் மட்டத்தை அதிகரிக்கச் செய்து அரசாங்கத்துக்கு வழங்கும் பங்களிப்பை அதிகரித்தல்.
- சந்தையின் தலைமைத்துவ நிலையைப் பேணுதல்.
- செயற்பாட்டு வினைத்திறனை விருத்தி செய்தல்.
- நிறுவனத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல்.
- பணியாளர்கள் மத்தியில் வினைத்திறனையும் செயற்திறனையும் விருத்தி செய்தல்.
- வாடிக்கையாளரின் திருப்தியை உச்சப்படுத்துதல்

## அடிப்படை விழுமியங்கள்

- நாம் பொறுப்பும் பதில் சொல்லும் கடப்பாடும் உடையவர்கள்.
- நாம் நேர்மையானவர்களென்பதுடன் வெளிப்படையானவர்கள்.
- நாம் கூட்டு முயற்சிகளிலும் தேர்ச்சியிலும் நம்பிக்கைக் கொண்டவர்கள்.
- நாம் நவீன தொழினுட்பங்களைப் பயன்படுத்தி மாற்றத்தை விரும்புவோர்.
- நாம் உயர் வாடிக்கையாளர் சேவையில் நம்பிக்கை கொண்டவர்கள்.

# பணிப்பாளர் சபை



## இடமிருந்து வலமாக

**திரு. சமிந்த அதுளுவகே**
தலைவர்

**திரு. ஜானக ஶ்ரீ வர்ணசிங்க**
தொழிற்படும் பணிப்பாளர்

**திரு. ஆர்.ஜே.ரி.அபேவர்தன**
பணிப்பாளர்

**திரு. சம்பத் திசாநாயக்க**
பணிப்பாளர்

**திரு. சமன் கலப்பதி**
அவதானிப்பாளர்





# திறைசேரி பிரதிநிதிகள்

## இடமிருந்து வலமாக

திரு. வீ.எம்.அமீன் - பணிப்பாளர் (ஜூலை 2010முதல் மார்ச் 2013வரை)
திரு. எஸ். ஏக்கநாயக்க - பணிப்பாளர் (ஏப்ரல் 2013முதல் ஆகஸட் 2013வரை)
திரு. எச்.ஜீ. சுமனசிங்க - பணிப்பாளர் (ஒக்டோபர் 2013 முறை இதுவரை)

# சிரேஷ்ட
## முகாமைத்துவம்



**திரு. எம். எஸ். கருணாரத்ன** (B.A)
பொது முகாமையாளர்



**திரு. அஷோக் விதாரண**
மேலதிகப் பொது முகாமையாளர்



**திரு. ஹர்ஷ பண்டார**
FCMA(UK), FCCA (UK),
MBA(USA)AMSLIM, FCMA(SL),
FCPM, CGMA, FCAA
பிரதம நிதியியல் அலுவலர்



**திரு. ரோஹண விஜேவிக்ரம** (FCA)
பிரதிப் பொது முகாமையாளர்
(கூட்டாண்மை நிதி)



**திரு. வி. சுந்தரேஸ்வரன்**
பிரதி பொது முகாமையாளர்
(வருமான நிதி)



**திரு. விஜய சமரநாயக்க**
பிரதி பொது முகாமையாளர்
(கூட்டாண்மை தொடர்பாடல்)



**திருமதி. கீதா பெரேரா**
பிரதி பொது முகாமையாளர்
(செயற்பாட்டு நிதி)



**திரு. ரவீந்திர பர்னாந்து**
பிரதிப் பொது முகாமையாளர்
(வழங்கல்)



# மதிப்பிடமுடியா பயணம்

நாட்டின் சுகாதாரச் சேவைகளுக்கு நிதி வழங்குவதற்காக இலங்கையில் அரசாங்கத்தினால் முதன் முதலில் லொத்தர் நடைமுறை ஸ்தாபிக்கப்பட்டது. 1949ஆம் ஆண்டு நாட்டின் சுகாதாரச் சேவைகளை முன்னேற்றும் நோக்கத்துடன் லொத்தர் ஒன்றை ஆரம்பிக்க வேண்டுமென அரசாங்கத்திற்கு உள்ளாட்சி அமைச்சர் முன்மொழிவொன்றைச் சமர்ப்பித்தார். இந்த முன்மொழிவின் பெறுபேறாக, 1955ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க ஆஸ்பத்திரி லொத்தர் சபை ஸ்தாபிக்கப்பட்டது.

சுகாதாரத் துறை தவிர்ந்த ஏனைய அபிவிருத்தித் திட்டங்களுக்கும் நிதியீட்ட வேண்டிய தேவையினால் 1960களில் ஒழுங்கமைக்கப்பட்ட லொத்தரின் நோக்கத்தை விரிவுபடுத்த வேண்டியதன் தேவையை அரசாங்கம் புரிந்து கொண்டது.

இதன் பெறுபேறாக, ஆஸ்பத்திரி லொத்தர் நடைமுறை நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக நாட்டின் அபிவிருத்திக்கான நிதியை உருவாக்குவதற்கென 1963ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் கீழ் தேசிய லொத்தர் சபை ஸ்தாபிக்கப்பட்டது.

# பயணத்தின் நிழற் பதிவுகள்

## முதலாவது தசாப்தம்
1963- 1972

1963 1963 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழ் தேசிய லொத்தர் சபை ஸ்தாபிக்கப்பட்டது.

1964 டொரிங்டன் சதுக்கத்தில் முதலாவது ஜாதிக லொத்தர் சீட்டிழுப்பு மேற்கொள்ளப்பட்டது (20.02.1964).

1965 வென்றவர்களுக்கு பென்ஸ் கார் பரிசளிக்கும் நடைமுறை ஆரம்பமானது.

1967 இரத்தினபுரியில் முதலாவது கிளை அலுவலகம் திறக்கப்பட்டது.

1968 ஜாதிக சம்பத லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது.

1970 ஜாதிக சம்பத லொத்தர் மஹஜன சம்பத லொத்தர் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது (28.07.1970).

## இரண்டாவது தசாப்தம்
1973- 1982

1975 இல. 111/1, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தையில் அமைந்த புதிய கட்டிடத்துக்கு இடம்பெயர்ந்தமை.

1977 ஜாதிக சம்பத லொத்தரின் விலை 50 சதத்திலிருந்து ரூ.1 ஆக அதிரிக்கப்பட்டது.

## மூன்றாவது தசாப்தம்
1983- 1992

1987 சுபிரி ஜாதிக லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது (11.04.87).

1988 மஹஜன சம்பத லொத்தர் சீட்டின் விலை ரூ.1/- இலிருந்து ரூ.8/-ஆக அதிகரிக்கப்பட்டது.

லொட்டோ லொத்தரின் அறிமுகம் (செப்டம்பர் 1988).

ரூபவாஹினியில் மஹஜன சம்பதவின் முதலாவது சீட்டிழுப்பு ஒளிபரப்பானது (10.05.1988).

1989 மஹஜன சம்பத லொத்தர் சீட்டின் விலை ரூ.8/- இலிருந்து ரூ.10/- ஆக அதிகரிக்கப்பட்டது.

1992 எயர்போா்ட் சுப்பர் ட்றோ லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது.

## நான்காவது தசாப்தம்
1993- 2002

1994 வாசனா சம்பத லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது.

1995 கொவிசெத லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது.

1996 சமுர்தி லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது.

1997 சிரம வாசனா லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது. செவன லொத்தர் தேசிய லொத்தர் சபையுடன் கூட்டிணைக்கப்பட்டது.

1999 சுபிரி வாசனா சம்பத லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது.

2000 ஜயவிரு லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது.

**ஐந்தாவது தசாப்தம்**
2003- 2013

| | |
|---|---|
| 2004 | சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதி உதவியளிப்பதற்காக சரண லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது. |
| | ஊழியர் நன்மைக்காக நலன்புரி மற்றும் சிக்கன நிதியங்கள் ஆரம்பிக்கப்பட்டன. |
| 2005 | 2005 ஆம் ஆண்டு SLIM விருது வழங்கும் விழாவில் வங்கி மற்றும் நிதிச் சேவைகள் பிரிவில் சிறந்த வியாபார நாமத்துக்கான விருதை மஹஜன சம்பத வென்றது. |
| 2006 | லொட்டோ லொத்தர் நிறுத்தப்பட்டு சுவசெத லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது. |
| | மஹஜன சம்பத லொத்தரின் மூலம் அதிகூடிய சுப்பர் பரிசுத் தொகை வழங்கப்பட்டது (ரூ.61.3மி.) |
| 2007 | நியூ எயர்போர்ட் லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது. |
| | எயர்போர்ட் சுப்பர் ட்றோ லொத்தரின் விலை அ.டொ. 25இலிருந்து அ.டொ. 50 ஆக அதிகரிக்கப்பட்டது. |
| 2008 | குலுக்கள் லொத்தர் சீட்டுக்களின் விலை ரூ.10/- இலிருந்து ரூ.20/- ஆக அதிகரிக்கப்பட்டது (02.09.2008). |
| 2010 | சிரம வாசனா லொத்தர் மற்றும் சுவசெத லொத்தர் ஆகியவற்றுக்குப் பதிலாக ஜாதிக சம்பத லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது. |
| 2011 | வரலாற்றில் முதன் முறையாக ரூ.10 பில்லியன் விற்பனையை அடைந்தமை. |
| | ஜயவிரு லொத்தர் நிறுத்தப்பட்டு சுபிரி வாசனா சம்பத லொத்தர் புதன் கிழமைகளிலும் அறிமுகப்படுத்தப்பட்டது. |
| | மஹஜன சம்பத லொத்தர் ஞாயிற்றுக் கிழமைகளிலும் அறிமுகப்படுத்தப்பட்டது. நியூ எயர்போர்ட் லொத்தர் சீட்டிழுப்பு நடாத்தப்பட்டு, பலவீனமான செயற்பாடு காரணமாக நிறுத்தப்பட்டது. |
| | ரூ.10 மில்லியனுக்கும் அதிகமான சுப்பர் பரிசுகள் 5 மூன்று வாரங்களினுள் வெல்லப்பட்டன. |
| | அவற்றில் 4 பரிசுகள் தொடர்ச்சியாக அடுத்தடுத்த தினங்களில் வெல்லப்பட்டன. |
| 2012 | சம்பத் ரேகா என்ற பெயரில் புதிய லொத்தா ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது. கொவிசெத லொத்தர் வியாழக்கிழமைகளிலும் அறிமுகப்படுத்தப்பட்டது. வாசனா சம்பத லொத்தர் திங்கட்கிழமைகளிலும் அறிமுகப்படுத்தப்பட்டது. |
| 2013 | கொவிசெத லொத்தரின் சுப்பர் பரிசானது ரூ.10 மில்லியனிலிருந்து ரூ.40 மில்லியனாக அதிகரிக்கப்பட்டது. |
| | சம்பத் ரேகா லொத்தரின் சுப்பர் பரிசானது ரூ. 5 மில்லியனிலிருந்து ரூ.10 மில்லியனாக அதிகரிக்கப்பட்டது. |
| | 27 சுப்பர் பரிசுகள் வழங்கப்பட்டன. தேசிய லொத்தர் சபையின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மெகா 50 லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது. |

# உற்பத்தி

## வரிசை

# சீட்டிழுப்பு வகை லொத்தர்கள்



මහජන සම්පත
மஹஜன சம்பத
MAHAJANA SAMPATHA

**விளக்கம்**
லொத்தர் சந்தையில் தொன்மையான லொத்தர். இந்த லொத்தர் சீட்டின் விலை ரூ.20.00.

**சீட்டிழுப்பு நாட்கள்**
செவ்வாய், வெள்ளி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகள்.

**பரிசுகள்**
ரூ. 10 மில்லியனில் ஆரம்பமாகும் சுப்பர் பரிசு,
ரூ. 20 இலட்சம் முதல் பரிசுகள் மற்றும் கவர்ச்சிகரமான பரிசுகள்.

**பங்களிப்பு**
மொத்தப் புரள்வில் இருந்து 16.5% திரட்டிய நிதியத்துக்கு வழங்கப்படுகிறது.



වාසනා සම්පත
வாசனா சம்பத
VASANA SAMPATHA

**விளக்கம்**
1994ஆம் ஆண்டு சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த லொத்தர் சீட்டின் விலை ரூ.20.00.

**சீட்டிழுப்பு நாட்கள்**
திங்கட்கிழமை மற்றும் வியாழக்கிழமை.

**பரிசுகள்**
ரூ.10 மில்லியனில் ஆரம்பமாகும் சுப்பர் பரிசு,
ரூ.10 இலட்சம் முதல் பரிசுகள் மற்றும் கவர்ச்சிகரமான பரிசுகள்

**பங்களிப்பு**
மொத்தப் புரள்வில் இருந்து 16.5% திரட்டிய நிதியத்துக்கு வழங்கப்படுகிறது.



ගොවි සෙත
கொவிசெத
Govisetha

**விளக்கம்**
கமத்தொழில் அமைச்சுக்காக "விவசாயிகள் நிதியத்துக்கு" நிதி திரட்டும் நோக்கத்துடன் 1995 ஆம் ஆண்டு சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்டது. உயர் விற்பனையை நோக்காகக் கொண்டு இந்த லொத்தரின் சுப்பர் பரிசானது நவம்பர் 2013 இல் ரூ.10 மில்லியனிலிருந்து ரூ.40 மில்லியனாக அதிகரிக்கப்பட்டது. இந்த லொத்தர் சீட்டின் விலை ரூ.20.00.

**சீட்டிழுப்பு நாட்கள்**
திங்கட்கிழமை மற்றும் வியாழக்கிழமை.

**பரிசுகள்**
ரூ.10 மில்லியனில் ஆரம்பமாகும் சுப்பர் பரிசு, ரூ.40 இலட்சம் முதல் பரிசுகள் மற்றும் கவர்ச்சிகரமான பரிசுகள்

**பங்களிப்பு**
மொத்தப் புரள்வில் இருந்து 10% கமத்தொழில் அமைச்சுக்கு வழங்கப்படுகிறது.



## சுபிரி வாசனா சம்பத
## SUPIRI WASANA SAMPATHA

**விளக்கம்**

சுபிரி வாசனா லொத்தர் 1999ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த லொத்தர் சீட்டின் விலை ரூ.20.00.

**சீட்டிழுப்பு நாட்கள்**

புதன்கிழமை மற்றும் சனிக்கிழமை

**பரிசுகள்**

ரூ.10 மில்லியனில் ஆரம்பமாகும் சுப்பர் பரிசு, ரூ.10 இலட்சம் முதல் பரிசுகள் மற்றும் கவர்ச்சிகரமான பரிசுகள்

**பங்களிப்பு**

புதன் கிழமை சீட்டிழுப்பின் மொத்தப் புரள்விலிருந்து 10% ரணவிரு சேவா அதிகார சபைக்கும் சனிக்கிழமை சீட்டிழுப்பின் மொத்தப் புரள்விலிருந்து 10% விளையாட்டு அமைச்சு மற்றும் சமூக சேவைகள் அமைச்சுகளிடையே சமமாகப் பகிர்ந்தளிக்கப்படுகிறது.



## ஜாதிக சம்பத
## JATHIKA SAMPATHA

**விளக்கம்**

சபையானது 2010 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் சுவசெத மற்றும் சிரம வாசனா லொத்தர்களுக்குப் பதிலாக இந்த லொத்தரை அறிமுகம் செய்தது. இந்த லொத்தர் சீட்டின் விலை ரூ.20.00.

**சீட்டிழுப்பு நாட்கள்**

புதன் கிழமை மற்றும் சனிக்கிழமை

**பரிசுகள்**

ரூ.10 மில்லியனில் ஆரம்பமாகும் முதல் பரிசு, ரூ.20 இலட்சம் முதல் பரிசுகள் மற்றும் கவர்ச்சிகரமான பரிசுகள்

**பங்களிப்பு**

புதன் கிழமை சீட்டிழுப்பின் மொத்தப் புரள்விலிருந்து 10% சுகாதார அமைச்சுக்கும் சனிக்கிழமை சீட்டிழுப்பின் மொத்தப் புரள்விலிருந்து 10% தொழில் அமைச்சுக்கும் வழங்கப்படுகிறது.



## சம்பத் ரேகா
## SAMPATH REKHA

**விளக்கம்**

இந்த லொத்தரானது 2012ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த லொத்தர் சீட்டின் விலை ரூ.20.00.

**சீட்டிழுப்பு நாட்கள்**

செவ்வாய், வெள்ளி மற்றும் சனிக்கிழமை.

**பரிசுகள்**

ரூ.10 மில்லியன் சுப்பர் பரிசு மற்றும் ரூ.1 மில்லியன் முதல் பரிசு கவர்ச்சிகரமான பரிசுகள்

**பங்களிப்பு**

மொத்தப் புரள்விலிருந்து 5% திரட்டிய நிதியத்துக்கு வழங்கப்படுகிறது.




**விளக்கம்**

தேசிய லொத்தர் சபையின் 50 ஆண்டுகள் பூர்த்தியை முன்னிட்டு 2013ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த லொத்தர் சீட்டின் விலை ரூ.20.00. முதலாவது மற்றும் இரண்டாவது சீட்டிழுப்புகள் முறையே 2013ஆம் ஆண்டு ஒக்டோபர் மற்றும் டிசம்பர் மாதங்களில் நடைபெற்றன.

**பரிசுகள்**

சுப்பர் பரிசாக ரூ.50 மில்லியன் வழங்கப்பட்டது. ஏனைய பரிசுகள் குறித்த சீட்டிழுப்புகளின் பரிசுக் கட்டமைப்புக்கேற்ப வேறுபட்டன. முதலாவது சீட்டிழுப்பில் 50 பென்டா கார்கள் முதல் பரிசுகளாக வழங்கப்பட்டன. இரண்டாவது சீட்டிழுப்பில் 28 சொட்டே ஜீப் வண்டிகள் முதல் பரிசுகளாக வழங்கப்பட்டன.

**பங்களிப்பு**

மொத்தப் புரள்விலிருந்து 10% திரட்டிய நிதியத்துக்கு வழங்கப்படுகிறது.




**விளக்கம்**

இந்த லொத்தரானது 1992 ஆம் ஆண்டு விமான நிலைய விமான சேவைகள் அதிகாரசபைக்கு நிதித் திரட்டும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. ஓவ்வொரு சீட்டும் 50 அமெரிக்க டொலர்கள் அல்லது அதற்கு இணையான வேறு மாற்றத்தகு நாணயத்துக்கு விற்கப்படுகின்றது. இந்த லொத்தர் சீட்டுக்கான சீட்டிழுப்பானது குறித்த எண்ணிக்கையிலான (6000 சீட்டுக்கள்) சீட்டுக்கள் விற்பனை செய்யப்பட்ட பின்னர் நடத்தப்படும்.

**பரிசுகள்**

ஆடம்பர சொகுசு மோட்டார் காரொன்று (பிஎம்டபிள்யூ அல்லது பென்ஸ்) பரிசளிக்கப்படும்.

**பங்களிப்பு**

விமான நிலைய விமான சேவைகள் அதிகாரசபைக்கு வழங்கப்படும்.

# உடனடி லொத்தர்கள்




**விளக்கம்**

1985 ஆம் ஆண்டு வீடமைப்புக்காக நிதித் திரட்டும் நோக்கத்துடன் இந்த லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது. சந்தையில் பிரபலமான சுரண்டல் லொத்தரான செவன சர்வதேச அங்கீகாரம் பெற்ற சுரண்டி ஒப்பிடும் தொழிநுட்பத்தை உள்வாங்கியுள்ளது. தனியான நிறுவனமாகவிருந்து 1990 இல் தேசிய லொத்தர் சபையுடன் இணைந்த செவன இந்த லொத்தரை நடாத்தி வந்தது.

**பங்களிப்பு**

மொத்தப் புரள்விலிருந்து 10% வீடமைப்பு அமைச்சுக்கு வழங்கப்படுகிறது.




**விளக்கம்**

1996ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் சமுர்தி அதிகாரசபைக்கு நிதித் திரட்டும் நோக்கத்துடன் இந்த லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது. தேசிய லொத்தர் சபையால் சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்ட முதலாவது சுரண்டல் வகையிலான லொத்தர் இதுவாகும். இது அங்கீகாரம் பெற்ற சுரண்டி ஒப்பிடும் தொழினுட்பத்தை உள்வாங்கியுள்ளது.

**பங்களிப்பு**

மொத்தப் புரள்விலிருந்து 10% சமுர்த்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சுக்கு வழங்கப்படுகிறது.

இவற்றுக்கு மேலதிகமாக 2013 ஆம் ஆண்டில் தேசிய லொத்தர் சபையின் 50 ஆண்டுகள் பூர்த்தியை முன்னிட்டு இரண்டு விசேட உடனடி லொத்தர்கள் சந்தைக் கேள்விக்கேற்ப ரூ. 50.00 மற்றும் ரூ. 20.00 விலையில் அறிமுகப்படுத்தப்பட்டன. மொத்தப் புரள்விலிருந்து 10% திரட்டிய நிதியத்துக்கு வழங்கப்படுகிறது.



# தலைவரின்
## மீளாய்வு



“ மற்றுமொரு கணக்காண்டு நிறைவடையும் வேளையில், கடந்த 5 ஆண்டுகளின் தொடர்ச்சியாக இந்த மீளாய்வினூடக கடந்த 2013ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுகள் மற்றும் ஆண்டறிக்கையை முன் வைப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

2013ஆம் ஆண்டு தேசிய லொத்தர் சபை தனது 50ஆவது ஆண்டு நிறைவைப் பூர்த்தி செய்துள்ளது. அந்த வகையில் 2013 சபைக்கு குறிப்பிடத்தக்க, முனைப்பான, சிறப்பான ஆண்டாக அமைந்தது.

1963 ஆம் ஆண்டு 11ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட தேசிய லொத்தர் சபையானது கடந்த 50 ஆண்டு காலப்பகுதியில் தொழில் வாய்ப்பு, மிகப்பெருந் தொகையை பரிசுகளாக வழங்கியமை மற்றும் அரசின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குப் பங்களிப்பு செய்தமை போன்ற பல்வேறு வழிகளினூடாக நாட்டுக்கு சேவையாற்றியுள்ளது”

## செயற்பாடு

தேசிய லொத்தர் சபையானது லொத்தர் சந்தையில் முதன்மையாளனென்ற வகையில் பொருளாதார ரீதியான மாற்றங்களையும் சந்தையில் நிலவிய கடும் போட்டிகளையும் தனது உயர் பலத்தினாலும் தடையறாத தைரியத்தாலும் எதிர்கொண்டு அரசின் குறிக்கோளான அபிவிருத்திக்கான நிதியை உருவாக்கும் செயற்பாட்டை மேற்கொண்டது. 2013 டிசம்பர் மாதம் 31ஆம் திகதி நிறைவடைந்த ஆண்டில் தேசிய லொத்தர் சபை ரூ. 14,000 மில்லியனை (14 பில்லியன்) மொத்தப் புரள்வாக அடைந்தது. இது இதுவரையில் வரலாற்றில் ஈட்டிய உயர் தொகை என்பதுடன், சிறந்த செயற்பாட்டினூடாக நிலையான முன்னேற்றத்தையும் அவதானிக்கலாம்.

மீளாய்வு செய்யப்படுகின்ற ஆண்டானது சபையின் வரலாற்றில் அதிகூடிய மொத்தப் புரள்வை ஈட்டிய ஆண்டென்ற வகையில் குறிப்பிடத்தக்கது. லொத்தர் சந்தையில் பிரதான போட்டியாளருடனான கடும் போட்டியின் மத்தியில் அதிலும் குறிப்பாக 50 ஆவது ஆண்டு நிறைவில் அதிகூடிய மொத்தப் புரள்வை ஈட்டியமை குறிப்பிடத்தக்கதும் அற்புதமானதுமாகும்.

2013 ஆம் ஆண்டில் சபையானது மொத்தப் புரள்வாக ரூ.14,537.3 மில்லியனைப் பதிவு செய்தது இது ஒப்பீட்டளவில் 2012ஆம் ஆண்டு ரூ.12,004.2 மில்லியனை பதிவு செய்திருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2013இல் 21.1% அதிகரிப்பைக் காணலாம்.

குறித்த ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட உத்திகள் மிகச் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்படடமை விற்பனை அதிகரிப்புக்கு பங்களித்தது. கொவிசெத, வாசனா சம்பத, ஜாதிக சம்பத ஆகிய லொத்தர்களின் மொத்தப் புரள்விலும் குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் காணலாம். எவ்வாறாயினும், சம்பத் ரேகா மற்றும் மெகா 50 லொத்தர் சீட்டுக்களின் விற்பனையே இந்த விற்பனை அதிகரிப்புக்கான பிரதான காரணமாக அமைகின்றது.

சம்பத் ரேகா லொத்தர் சீட்டானது 2012 ஆம் ஆண்டு மார்ச் மாதம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆரம்பத்தில் ஞாயிற்றுக் கிழமைகளில் மாத்திரம் சீட்டிழுக்கப்பட்டு 2012ஆம் ஆண்டு ஒக்டோபர் முதல் இந்த லொத்தர் சீட்டை செவ்வாய், வெள்ளி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் சீட்டிழுக்க சபையால் தீர்மானிக்கப்பட்டது.

வேறுபட்ட வாடிக்கையாளர் குழுவொன்றை இலக்காகக் கொண்டு மெகா 50 என்ற பெயரில் புதிய லொத்தரொன்று 2013 ஆம் ஆண்டு சபையால் அறிமுகப்படுத்தப்பட்டது. லொத்தர் சீட்டின் விலை ரூ. 100.00 ஆகும். இவ்விரு லொத்தர் சீட்டுக்களும் தேசிய லொத்தர் சபையின் 50 ஆவது ஆண்டு நிறைவுக்கான செலவுகளை ஈடுசெய்வதற்கான நிதியைத் திரட்டும் நோக்கிலேயே அறிமுகப்படுத்தப்பட்டன. மொத்தப் புரள்வின் அதிகரிப்பில் இவ்விரு லொத்தர் சீட்டுக்களினதும் பங்களிப்பானது 46.7% ஆகும்.
இவற்றுக்கு மேலதிகமாக கொவிசெத லொத்தரின் சுப்பர் பரிசானது வாடிக்கையாளர்களை மேலும் கவர்வதற்காக ரூ.10 மில்லியனிலிருந்து ரூ.40 மில்லியனாக அதிகரிக்கப்பட்டது. இதன் மூலமாக கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் கொவிசெத லொத்தரின் மொத்தப் புரள்வு 13.5% இனால் அதிகரித்தது.

உடனடி லொத்தர் விற்பனையும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 20.3% இனால் அதிகரித்தது. புதிய பரிசுக் கட்டமைப்புடனான லொத்தர் விளையாட்டுகள் மற்றும் வடக்கு கிழக்கு சந்தை விரிவாக்கம் ஆகியன உடனடி லொத்தர் சீட்டுக்களின் விற்பனை அதிகரிப்புக்குக் காரணமாயின. விற்பனை அதிகரிப்பில் 67% மேற்குறிப்பிடப்பட்ட மூன்று லொத்தர்களினதும் பங்களிப்பாகும். தேசிய லொத்தர் சபையானது இன்றும் நாடளாவிய ரீதியில் சந்தை முதன்மையாளனாகத் திகழ்கின்றது.

2013ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட பரிசுகள் ரூ. 7,083.6 மில்லியன் இது 2012 இல் ரூ. 5,787.2 மில்லியன் ஆகக் காணப்பட்டது. 22.3% அதிகரிப்பைக் காணலாம். மொத்தப் புரள்வில் ஏறத்தாழ 50% மக்கள் மத்தியில் சபையால் பரிசுகளாக வழங்கப்பட்டது.

சபையானது, 2013 ஆம் ஆண்டில் ரூ. 10 மில்லியனை விட அதிக தொகையை வென்ற 27 சுப்பர் பரிசு வெற்றியாளர்களையும், 263 இரண்டு மில்லியன் ரூபாய் வெற்றியாளர்களையும், 438 ஒரு மில்லியன் ரூபாய் வெற்றியாளர்களையும், 3712 ஒரு இலட்ச ரூபாய் வெற்றியாளர்களையும் உருவாக்கக்கூடியதாக இருந்தது. இந்த வெற்றியாளர்கள் தமது நிலையை உயர்த்துவதோடு நேரடியாகவும் மறைமுகமாகவும் இந்த நாட்டின் அபிவிருத்திக்கு பயனுள்ள பங்களிப்பை வழங்குவார்கள் என நம்புகின்றேன்.

சபையானது முகவர் தரகாக ரூ. 2,701.5 மில்லியனை 2013ஆம் ஆண்டிலும் ஒப்பீட்டளவில் 2012ஆம் ஆண்டில் ரூ. 2,232.5 மில்லியனையும் வழங்கியது. முன்னயை ஆண்டை விட 21.1% அதகரிப்பைக் காணலாம்.

தேசிய லொத்தர் சபையின் முகவர் வலையமைப்பானது மாவட்ட விற்பனை முகவர்கள், முகவர்கள் மற்றும் விற்பனை உதவியாளர்களை உள்ளிட்டதாகவுள்ளது. தேசிய லொத்தர் சபையானது 20,000 மறைமுக தொழில் வாய்ப்புகளை வழங்கியுள்ளது. இந்த ஆண்டிலும் எமது விநியோக வலையமைப்பைப் பலப்படுத்துவதற்காக புதிய மாவட்ட விற்பனை முகவர்களையும், விற்பனை முகவர்களையும் நியமிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வலையமைப்பானது கல்வி கற்றோர், கல்லாதோர், இளைஞர், முதியோர், மற்றும் அங்கவீனர் உள்ளிட்ட பல்வேறு பிரிவினரை உள்ளடக்கியதாகவுள்ளது. சமூகத்தால் புறக்கணிக்கப்பட்ட அங்கவீனர் எம்முடன் இணைந்து அவர்கள் வாழ்க்கைத் தரத்தில் சாதகமான மாற்றத்தை அடைந்துள்ளமை தொடர்பில் தேசிய லொத்தர் சபை மகிழ்ச்சியடைகின்றது. இதனடிப்படையில் தேசிய லொத்தர்சபையானது இந்நாட்டின் வேலையில்லாப் பிரச்சினைக்கு சாதகமான தீர்வொன்றை வழங்கியுள்ளது.

2013ஆம் ஆண்டில் சபையானது திரட்டிய நிதியத்துக்கு ரூ. 1753.1 மில்லியனை வழங்கியது. இத்தொகை 2012ஆம் ஆண்டில் ரூ. 1574.1 மில்லியனாகும். ஒப்பீட்டளவில் 39.6% அதிகரிப்பைக் காணலாம். வழமையான பங்களிப்புக்கு மேலதிகமாக 2013 ஆம் ஆண்டில் ரூ. 500 மில்லியன் விசேட திறைசேரிக்கான விசேட பங்களிப்பாக வழங்கப்பட்டது.

நடப்பாண்டில் வரிகள் மற்றும் விசேட பங்களிப்புகள் (பெறுமதி சேர் வரி, தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி, வருமான வரி மற்றும் கருதப்படக்கூடிய ஈவுத்தொகை வரி) உள்ளிட்ட அரசுக்கான மொத்த பங்களிப்பு ரூ. 3,822.2 மில்லியனாகும். இப்பங்களிப்பு 2012ஆம் ஆண்டில் ரூ. 3,341.1 மில்லியனாகும். இவ்விரு ஆண்டுகளுக்கிடையிலான ஒப்பீட்டினடிப்படையில் 2013 இல் 14.3% (ரூ.480.9 மில்லியன்) அதிகரிப்பைக் காணலாம். 2013ஆம் ஆண்டில் அரசாங்கத்துக்கு மொத்தக் கொடுப்பனவாக விற்பனையின் 26.2% வழங்கப்பட்டது.

சபையின் ஏனைய வருமானம் 2013 இல் ரூ.220.2 மில்லியனாகும் இது 2012ஆம் ஆண்டில் ரூ. 275.1 மில்லியனாகக் காணப்பட்டது. ஒப்பீட்டளவில் ரூ. 54.9 மில்லியன் குறைவடைந்துள்ளது. எவ்வாறெனினும், பொதுவான வீழ்ச்சியானது சந்தையில் வட்டி வீதத்திலான வீழ்ச்சியுடன் தொடர்பானது.

2013ஆம் ஆண்டில் சபையின் இயங்கு செலவானது ரூ. 1,571.3 மில்லியன். இது விற்பனைப் புரள்வில் 10.8% ஆகும். 2012 ஆம் ஆண்டில் இத்தொகை ரூ. 1,112.9 மில்லியன், விற்பனைப் புரள்வில் 9.2% ஆகக் காணப்பட்டது. இந்த அதிகரிப்புக்கான முக்கிய காரணங்களாக: சபையின் 50ஆவது ஆண்டு நிறைவையொட்டி சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனைச் செலவில் ஏற்பட்ட ரூ. 391.4 மில்லியன் அதிகரிப்பு மற்றும் விற்பனை அடிப்படையிலான செலவுகள் காணப்படுகின்றன. விற்பனைப் புரள்வில் 21.1% அதிகரிப்பினூடாக சந்தையில் உயிர்ப்புடன் இருப்பதற்காக சபையானது பல்வேறுபட்ட விற்பனை மேம்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டது.

வரிக்கு முன்னரான இலாபமாக 2013 இல் ரூ.476.6 மில்லியன் காணப்பட்டது. இது விற்பனைப் புரள்வில் 3.2% ஆகவிருந்தது. இது 2012 இல் ரூ.581.7 மில்லியனாகவும் விற்பனைப் புரள்வில் 4.8% ஆகவுமிருந்தது. சபையானது மீளாய்வுக்குரிய ஆண்டில் வரிக்குப் பின்னர் ரூ. 133.4 மில்லியன் நட்டத்தைப் பதிவு செய்துள்ளது. முன்னைய ஆண்டில் இத்தொகை ரூ. 312.1 மில்லியனாகக் காணப்பட்டது. ஒப்பீட்டளவில் குறைந்துள்ளமையைக் காணலாம். ரூ. 314.0 மில்லியன் கருதப்படக்கூடிய வரியே இதற்கான காரணமாகும்.

வாடிக்கையாளரைக் கவர்வதற்காக கொழும்பு எயர்போர்ட் சுப்பர் ட்றோ லொத்தரின் பரிசாக பிஎம்டபிள்யூ காரொன்றுக்குப் பதிலாக போர்ஷே காரொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. மன்னாரில் விருந்தினர் விடுதியொன்று நிர்மாணிக்கப்பட்டு, பாவனையிலுள்ளது.

## 50 ஆண்டு பூர்த்தி நடவடிக்கைகள்

2013ஆம் ஆண்டு தேசிய லொத்தர் சபையின் 50 ஆண்டுகள் நிறைவடைந்தமை இவ்வாண்டு சிறப்பான ஆண்டாக அமைந்தமைக்கான காரணமாகும். இதைக் கொண்டாடுவதற்காக தேசிய லொத்தர் சபை பல்வேறுபட்ட நடவடிக்கைகளை ஒழுங்கு செய்தது. “மெகா 50” என்ற பெயரில் ஒரு சிறப்பு லொத்தர் ரூ. 100.00 விலையில் சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் பரிசுகளாக ரூ. 50 மில்லியன் சுப்பர் பரிசு, 50 மைக்ரோ பன்டா கார்கள் மற்றும் வேறு பரிசுகள் அறிவிக்கப்பட்டன. இதன் மூலம் தேசிய லொத்தர் சபையானது வேறுபட்ட வருமான மட்டத்திலுள்ளோரைக் கவர உத்தேசித்தது. முதன்முறையாக எமது நாட்டின் லொத்தர் வரலாற்றில் ஒரு லொத்தர் சீட்டிழுப்பினூடாக அதிக எண்ணிக்கையிலான வாகனங்களைப் பரிசாக வழங்கிய லொத்தர் என்ற வகையில் பதிவு செய்யப்படுகிறது.

2013ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 5ஆம் திகதி பிரித் ஓதி 50 பௌத்த பிக்குமாருக்கு தானம் வழங்கப்பட்டது. வெலிசர தொழுநோய் மருத்துவமனைக்கு தானம் மற்றும் நோயாளர்களுக்கு காலணிகளும் வழங்கப்பட்டன. மருத்துவமனையினுள் அமைந்துள்ள தேவாலயத்துக்கு ஓகன் வாத்தியம் ஒன்று வழங்கப்பட்டதுடன் நோயாளர்களுக்கு ஆசீர்வாதம் வேண்டி விசேட ஆராதனை ஒன்றும் மேற்கொள்ளப்பட்டது. தமிழ், இந்து ஊழியர்களைக் கருத்திற் கொண்டு மோதரை காளி கோயிலில் 1008 சங்காபிஷேக பூஜை நடாத்தப்பட்டது. அது போன்று கொட்டாஞ்சேனை ஹரேகிருஷ்யணா கோயில் நிர்மாணத்துக்கு நன்கொடை வழங்கப்பட்டது. சமய வேறுபாடுகளின்றி அனைத்து ஊழியர்களும் இவ்வழிபாடுகளில் பங்குபற்றினர்.

இவற்றுக்கு மேலதிகமாக நாடளாவிய ரீதியில் பல்வேறு வழிபாட்டு ஸ்தலங்களுக்கு நன்கொடைகள் வழங்கப்பட்டன. இச்சமய வழிபாடுகளினூடாக சபையானது இந்நாட்டுக்கு அதியுயர் சேவையை வழங்குவதற்கு ஆசீர்வதிக்குமாறு வேண்டப்பட்டது. 2013ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பத்தரமுல்லையில் அமைந்துள்ள “அபேகம” வில் அனைத்து ஊழியர்களுக்கும் அவர்களது குடும்ப அங்கத்துவர்களுக்குமான ஒன்றுகூடல் இடம்பெற்றது.

## ஊழியர்கள்

திருப்தியான, முனைப்புமிக்க, விசுவாசமுள்ள ஊழியர்கள் போட்டித்தன்மையுள்ள நிறுவனத்தை பிரநிதித்துவப்படுத்துகிறார்கள். திருப்தி மட்டம் அதிகரித்துள்ளமையை உற்பத்தியிலதிகரிப்பு, உற்பத்திப் பொருட்களின் மேம்பாடு, தரம்மிக்க சேவைகள், மற்றும் அதிக எண்ணிக்கையிலான கண்டுபிடிப்புகளினூடாகக் காணலாம். திருப்திமிக்க ஊழியர்கள் சிறந்த குறிக்காட்டிகளாக புதிதாகத் தொழிலில் இணைபவர்களைக் கவர்பவர்களாக சந்தையில் நிறுவனத்தின் இருப்பைத் தக்கவைக்க உதவுகின்றனர். அனைத்து ஊழியர்களும் இதற்குத் துணை நிற்கின்றனர்.

இதனால் சபையானது முனைப்பு மிக்க ஊழியர்களைத் தக்கவைப்பதற்காக தம்மால் இயன்ற அனைத்து வசதிகளையும் வழங்கியுள்ளது. விற்பனை ஊக்குவிப்புத் திட்டம், மருத்துவக் காப்புறுதி, சீருடை வசதி, போனஸ் மற்றும் பயிற்சி நெறிகள் ஆகியன முன்னைய ஆண்டின் தொடர்ச்சியாக அமைந்தன. மாதாந்த, வருடாந்த சிறந்த ஊழியர் தெரிவும் தொடர்ந்தது. அத்துடன் ஊழியர்களுக்கான புத்தாண்டு நிகழ்ச்சியும் 2013ல் ஒழுங்கு செய்யப்பட்டது. இது இனிவரும் ஆண்டுகளிலும் தொடரவுள்ளது.

## முகவர் வலையமைப்பு

முன்னைய ஆண்டுகளில் முகவர் வலையமைப்பை பலப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டன. ஒப்பந்தங்களைக் கைச்சாத்திடல், புதிய முகவர் நியமனம், காப்புறுதித் திட்டம், முகவர்களின் பிள்ளைகளுக்கான புலமைப்பரிசில், ஊக்குவிப்புக் கொடுப்பனவு, விற்பனை மேம்படுத்தல் பொருட்களை வழங்குதல், விற்பனைக் கூடுகளை வழங்குதல், மாவட்ட மட்டத்தில் முகவர் சந்திப்புகளை ஒழுங்கு செய்து பயிற்சிகளை வழங்குதல் ஆகியன சிறப்பாக மேற்கொள்ளப்பட்டன.

## கூட்டாண்மைச் சமூகப் பொறுப்பு

நிறுவனப் பிரதிமை விளம்பர பாதீட்டின் கீழ் தேசிய லொத்தர் சபையின் பிரதிமையை உயர்த்துவதற்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அவை நாட்டின் கல்வி, சமூக, சமய, சுற்றாடல் மற்றும் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்பனவாக அமைந்தன. இதற்கமைய தேசிய லொத்தர் சபையானது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளான தேசத்துக்கு மகுடம் கண்காட்சி, கார்ல்டன் சுப்பர் குரொஸ், இளைஞர்களுக்கான நாளை ஆகிய நிகழ்ச்சிகளுக்கு அனுசரணை வழங்கியது.

பல மாவட்டங்களில் பல்வேறுபட்ட அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. அனுசரணை வழங்கிய தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் கல்வி, சமூக, கலாச்சார, சமய அறிவை தேசத்துக்காக வழங்குவனவாக அமைந்தன.

## எதிர்காலம் பற்றிய எதிர்பார்ப்பு

முன்னர் லொத்தர் சந்தையில் தேசிய லொத்தர் சபை மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபை ஆகிய இரு நிறுவனங்களே காணப்பட்டன. தற்பொழுது வெளிநாட்டு நிறுவனமொன்றும் லொத்தர் சந்தையிலுள்ளது. இதன் காரணமாக லொத்தர் சந்தையில் கடும் போட்டி நிலை நிலவுகின்றது.

லொத்தர் தொழிலில் நிலவுகின்ற கடும் போட்டி நிலை காரணமாக எதிர்காலத்தில் சந்தையில் எமது நிலையைத் தக்கவைப்பதற்கான விசேட உத்திகள் திட்டமிடப்பட்டுள்ளன.

சபையானது 2014ஆம் ஆண்டுக்கான விற்பனை புரள்வாக ரூ. 18.5 பில்லியனைத் திட்டமிட்டுள்ளது. இது முன்னைய ஆண்டை விட 27.5% அதிகமாகும். கடந்த சில ஆண்டுகளில் தொடர்ச்சியான முன்னேற்றத்தைக் கவனத்திற் கொள்ளும் பொழுது இது திருப்தியாகவுள்ளது. சபையானது விசேட உத்திகளினூடாக 2014ஆம் ஆண்டு விற்பனையை அடைவது தொடர்பில் கவனஞ் செலுத்தும்.

ஈ இராஜ்ஜிய கொள்கைக்கமைய சபையானது தற்பொழுது நவீன உலகில் நடைமுறையிலுள்ள இணையத்தினூடாக ஈ லொத்தர், இணைய தளம், கையடக்கத் தொலைபேசிகள், சுப்பர் மார்க்கட் மற்றும் பிரபலமான கடைகளில் அறிமுகப்படுத்த திட்டமிடுகின்றது. இன்னும் சில ஆண்டுகளில் குலுக்கல் மற்றும் சுரண்டல் லொத்தர்கள் நிலையை அடையும் நிலை ஏற்படலாமென்பதால் இத்தகைய லொத்தர்களை அறிமுகப்படுத்துதல் அவசியமாகும். சபையானது 2013ஆம் ஆண்டில் இதற்கான ஆரம்பகட்ட வேலைகளை நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் சபைக்கு வெளியிலிருந்து கிடைக்க வேண்டிய அங்கீகாரங்களில் ஏற்பட்ட தாமதம் காரணமாக இம்முயற்சி பிற்போடப்பட்டது.

ERP (Enterprise Resource Plan) முறைமையானது லொத்தர் மேலாண்மை மற்றும் தனித்தியங்குகின்ற கணக்கீட்டு தொகுதிகள், வாகனப் பராமரிப்பு, சொத்து சரிபார்த்தல், அழைப்பு மேலாண்மை மற்றும் இது போன்ற ஏனைய முறைமைகளை ஒரே குடையின் கீழ் கொண்டு வந்து அதனூடாக செயற்பாட்டுத்திறனை விருத்தி செய்யும் நோக்குடன் அமுல்படுத்தப்பட்டது. சபையானது எதிர்வரும் ஆண்டில் ERP முறைமையினூடாக பணி செயல்திறனை மேம்படுத்த எண்ணியுள்ளது.

சபையானது மேலான வசதிகள் கொண்ட ஒரு புதிய இடத்துக்கு இடம்பெயர உத்தேசித்துள்ளது. இதன் விளைவாக ஊழியர்கள் மத்தியில் செயல்திறன் விருத்தி ஏற்படும். எனவே, தேசிய லொத்தர் சபையானது கொழும்பு 2ல், வொக்ஷால் வீதியிலுள்ள எமது நிலத்தில் நிரந்தரமான கட்டிடமொனடறை நிர்மாணிக்க எண்ணியுள்ளது.

முகவர் வலையமைப்பானது புதிய விற்பனைக் கூடுகள், துவிச்சக்கர வண்டிகள், போன்ற உட்கட்டமைப்பு வசதிகளினூடாக மேலும் பலப்படுத்தப்படவுள்ளது. இதேவேளையில் காலியாகவுள்ள பகுதிகள் மற்றும் பெயரிடப்படாத இடங்களில் முகவர்கள் நியமிக்கப்படுவார்கள். மேலும் முகவர் அமைப்பானது வரைபடத்தினடிப்படையில் கணனி மென்பொருளினூடாக கண்காணிக்கப்பட்டு தேவையேற்படும் சந்தர்ப்பங்களில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## நன்றி

லொத்தர் துறையில் நிலவுகின்ற சவாலான போட்டியின் மத்தியில் அரசாங்கத்துக்கு ரூ. 3,822.1 மில்லியனை வழங்கி ரூ. 14.0 பில்லியனை ஈட்டியமை இலகுவான விடயமல்ல. இந்த அடைவை பதிவு செய்வதற்கு அனைத்துப் பங்குதாரர்களும் தமது பெறுமதிமிக்க ஒத்துழைப்பை வழங்கியுள்ளனர். அதுபோன்று, முகாமைத்துவத்தினருக்கும், ஊழியர்களுக்கும் அவர்களது திறமையான செயற்பாட்டுக்கான எனது நன்றியைத் தெரிவிக்க விரும்புகின்றேன். அவர்களது

கடின உழைப்பின்றி இப்பெறுபேற்றை நாம் அடைவது சாத்தியமில்லை. எமது திறமையும் தகுதியும் மிக்க ஊழியர்களின் அர்ப்பணிப்புமிக்க செயலாற்றல் குறித்த ஆண்டில் வினைத்திறன் மிக்க செயற்பாட்டை இலகுவாக்கியது. மேலும், தமது பெறுமதிமிக்க வழிகாட்டலின் மூலம் துணைநின்ற பணிப்பாளர் சபைக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேசிய லொத்தர் சபையின் லொத்தர் சீட்டுக்கள் மீது தொடர்ச்சியாக உறுதியான நம்பிக்கை கொண்ட எமது வாடிக்கையாளர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இனிவரும் ஆண்டுகளிலும் இந்த நம்பிக்கை தொடர வேண்டுமென எதிர்பாக்கின்றேன்.

எமது பெருமதிப்புக்குரிய விநியோக வலையமைப்பின் அங்கத்தவர்களனைவருக்கும் நம்பகமிகுந்த நிறுவனமென்று சபையின் மீது நம்பிக்கை கொண்டு விசுவாசம்மிக்கவர்களாக கொழும்பு நகர் அலங்கரிப்பு நடவடிக்கைகளுக்கென விற்பனைக் கூடுகள் அப்புறப்படுத்தப்பட்ட பாதகமான வேளைகளில் கூட தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் ஒத்துழைப்பு வழங்கியமைக்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கணக்காய்வாளர் நாயகம், அவரது ஊழியர்கள், உள்ளகக் கணக்காய்வாளர்கள், வெளி கணக்காளர்கள், மற்றும் தனித் தனி லொத்தர்களுக்கான கணக்காய்வாளர்கள் ஆகியோருக்கு அவர்களது பெறுமதிமிக்க உதவிக்காகவும் குறித்த தருணங்களில் உரிய வழிகாட்டுதலுக்காகவும் நன்றி தெரிவிக்கிறேன். பரிசுகள் மற்றும் விளம்பர நிறுவனங்களைப் பரிசோதித்தமைக்கு சந்தேகத்துக்குட்பட்ட ஆவணங்களின் பரிசோதகருக்கும், சந்தைக்கு தாமதமின்றி உரிய நேரத்தில் சீட்டுக்களை வழங்கிய அச்சகத்தினருக்கும், சிறந்த சேவையை வழங்கியமைக்காக எமது பிரதான வங்கியான மக்கள் வங்கிக்கும் எனது நன்றி.

எம்மீது கொண்ட நம்பிக்கைக்காக அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களுக்கும், ஜனாதிபதி செயலக அதிகாரிகளுக்கும், எமது இந்த வெற்றிகரமான பயணத்துக்கு பெறுமதி மிகுந்த ஆலோசனைகளை வழங்கிய நிதி அமைச்சின் அதிகாரிகளுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எமது அனைத்துப் பங்குதாரர்களும் எதிர்காலத்திலும் எம்முடன் இணைந்திருப்பார்கள் என மனப்பூர்வமாக நம்புகிறேன்.



**சமிந்த அதுளுவகே,**
தலைவர்,
தேசிய லொத்தர் சபை.
2014 ஜுன் 30
கொழும்பு.

# தொழிற்படும்

## பணிப்பாளர்



"31 டிசம்பர் 2013ஆம் ஆண்டு முடிவடைந்த ஆண்டுக்கான கணக்காய்வு அறிக்கையை சமா்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்."

## தொடர்ந்து செல்லுதல்

சபையானது தொடர்ந்தும் எதிர்காலத்தில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான வளங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளதென்ற நியாயமான எதிர்பார்ப்பைக் கொண்டுள்ளது. இதற்காக, தொடர்ந்து செல்லுதல் கோட்பாடு கணக்குகளைத் தயாரிக்கும் பொழுது பின்பற்றப்படுகிறது.

## முதன்மைச் செயற்பாடுகள்

தேசிய லொத்தர் சபையின் முதன்மைச் செயற்பாடானது சீட்டிழுப்பு (குலுக்கல்) லொத்தர் மற்றும் சுரண்டல் லொத்தர் ஆகிய இரண்டையும் நடாத்திச் செல்லுதல் என்பதுடன் குறித்த ஆண்டில் இச் செயற்பாட்டின் இயல்பில் எதுவித மாற்றமும் ஏற்படவில்லை.

## செய்முறை மதிப்பீட்டு விமர்சனமும் எதிர்கால அபிவிருத்தியும்

குறித்த ஆண்டில் சபையின் வியாபாரம், அதன் செயற்பாடு மற்றும் நிதி முடிவுகள் பற்றிய கருத்துக்கள் தலைவரின் மீளாய்வில் பக்கம் 25 முதல் 30 வரையும், பிரத்தியேக உற்பத்திகள் பற்றிய விபரங்கள் செய்முறை மீளாய்வில் பக்கம் 19 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த அறிக்கைகளும் கணக்காய்வு அறிக்கைகளும் நிறுவனத்தின் சபை தொடர்பிலான விவகாரங்களின் நிலைமையை வெளிப்படுத்துகின்றன.

31 டிசம்பர் 2013 அன்று ஒதுக்கங்களும், திரட்டப்பட்ட இலாபமும் ரூ 1325.8 மில்லியனாகவிருந்தது. இது 2012 இல் ரூ1672.3 மில்லியனாக அமைந்தது. இவ்விபரங்கள் பக்கத்தில் நிதிக் கூற்றுகளில் பங்கு மாற்றங்களுக்கான கூற்றில் வழங்கப்பட்டுள்ளன.

பணிப்பாளர் தமது அறிவுக்குட்பட ஊழியர்கள் மற்றும் அரசாங்கத்துக்கான அனைத்து சட்டரீதியான கொடுப்பனவுகளும் சரியாக செலுத்தப்பட்டிருப்பதையிட்டு திருப்தியடைகின்றனர்.

## மனிதவள அபிவிருத்தி

சபையானது தொடர்ந்தும் ஊழியர்களுக்குப் பல்வேறு வசதிகளை வழங்கியது. இது ஊழியர்களை ஊக்கப்படுத்துவதுடன், திருப்திகரமான ஊழியர்கள் முகாமைத்துவத்தினர் வழங்கும் இலக்குகளை அடைவதில் சாதகமான பங்களிப்பை வழங்குவர். லொத்தர் விற்பனையின் அடிப்படையிலான ஊக்குவிப்புத் திட்டம், மருத்துவ வசதிகள், சீருடைக் கொடுப்பனவு, போக்குவரத்துக் கொடுப்பனவு ஆகியன ஊழியர்களுக்கான நன்மைகளில் சிலவாகும். மாதாந்த மற்றும் வருடாந்த ரீதியில் சிறந்த ஊழியர்களைத் தெரிவு செய்யும் வழக்கம் இந்த ஆண்டும் தொடர்ந்தது.

## அரசுக்கான பங்களிப்பு

சபையானது திரட்டிய நிதியத்துக்கான பங்களிப்பூடாக அரசுக்கு நேரடிப் பங்களிப்பை வழங்குகின்றது. மறைமுகப் பங்களிப்பான வரிகள் 2013ஆம் ஆண்டில் ரூ. 3,822.0 மில்லியனாகும். இது 2012இல் ரூ. 3,341.1 மில்லியனாகவிருந்தது. இதுபற்றிய விபரம் கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மீளாய்வுக்கான ஆண்டில் சபை ரூ. 20.3 மில்லியனை சொத்து மற்றும் ஆதனங்களில் முதலீடு செய்துள்ளது. இது 2012 இல் ரூ. 96.4 மில்லியனாகும்.

| அரசுக்கான பங்களிப்பு | 2013 | 2012 |
|---|---|---|
| | ரூ. மி. | ரூ. மி. |
| நேரடிப் பங்களிப்பு | | |
| திரட்டிய நிதியத்துக்கான பங்களிப்பு | 1,753.1 | 1,574.1 |
| திறைசேரிக்கான சிறப்பு வரி | 500.0 | 702.0 |
| | 2,253.1 | 2,276.1 |
| மறைமுகப் பங்களிப்பு | | |
| பெறுமதி சேர் வரி | 507.7 | 428.8 |
| தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான வரி | 203.5 | 168.8 |
| வருமான வரி / SRL | 610.0 | 269.6 |
| வலுவூட்டப்பட்ட பரிசுகள் | 247.7 | 197.8 |
| | 1,568.9 | 1,065.0 |
| அரசுக்கு வழங்கப்பட்ட மொத்தம் | 3,822.0 | 3,341.1 |

மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில் மொத்த இயங்கு செலவானது ரூ. 1,571.3 மில்லியனாகும். இது இதற்கு முந்தைய ஆண்டில் ரூ. 1,112.9 மில்லியனாகவிருந்தது. மொத்தப் புரள்வில் 10.8% ஆகவும் முந்தைய ஆண்டில் 9.2% ஆகவுமிருந்தது.

## பணிப்பாளர் சபை

மீளாய்வுக்குரிய ஆண்டில் பின்வரும் அதிகாரிகள் பணிப்பாளர் சபை அங்கத்துவர்களாக இருந்தனர்.

| | |
|---|---|
| திரு. சமிந்த அதுளுவகே | - தலைவர் |
| திரு. ஜானக ஸ்ரீ வர்ணசிங்க | - தொழிற்படும் பணிப்பாளர் |
| திரு. ஆர்.ஜே.ரி.அபேவர்தன | - பணிப்பாளர் |
| திரு. சம்பத் திசாநாயக்க | - பணிப்பாளர் |
| திரு. சமன் கலப்பதி | - அவதானிப்பாளர் |

**திறைசேரி உறுப்பினர்கள்**

| | |
|---|---|
| திரு. வி.எம்.அமீன் | - பணிப்பாளர் (ஜுலை 2010 முதல் மார்ச் 2013 வரை) |
| திரு. எஸ்.ஏக்கனாயக்க | - பணிப்பாளர் (ஏப்ரல் 2013 முதல் ஆகஸ்ட் 2013 வரை) |
| திரு. எச்.ஜீ.சுமனசிங்க | - பணிப்பாளர் (ஒக்டோபர் 2013 முதல் இன்று வரை) |

## முடிவுரை

தேசிய லொத்தர் சபையின் பணிப்பாளர்கள், முகாமைத்துவக் குழுவுக்கும் அனைத்து ஊழியர்களுக்கும் சிறந்த பலன்களை அடைவதற்கான அவர்களது அர்ப்பணிப்பு, விசுவாசம், ஆக்கத்திறன் மற்றும் கடின உழைப்பு ஆகியவற்றுக்காக தமது நன்றியைத் தெரிவிக்கின்றது.

தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்கிக் கொண்டிருக்கும் மாவட்ட விற்பனையாளர்கள், முகவர்கள், மக்கள் வங்கி, வழங்குனர்கள், அச்சகத்தினர், கணக்காய்வாளர் நாயகம் மற்றும் ஊழியர்கள் ஆகியோருடன் லொத்தர் கணக்காய்வாளர்களுக்கும் அர்ப்பணிப்பு, விசுவாசத்துடனான சிறந்த சேவையாற்றியமைக்கு சபை நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

**ஜானக ஸ்ரீ வர்ணசிங்க**
தொழிற்படும் பணிப்பாளர்,
தேசிய லொத்தர் சபை,
2013 ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி,
கொழும்பு.

# கணக்காய்வு மற்றும்
# முகாமைத்துவக
## குழுவின் அறிக்கை

## மேலோட்டம்

சபையின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவானது 2005ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது முதல் மதிப்பிடமுடியா சேவையை ஆற்றி வருகின்றது. 2011ஆம் ஆண்டில் குழுவானது பின்வரும் அங்கத்தவர்களை உள்ளடக்கியதாக மீளமைக்கப்பட்டது.

**திரு. ஆர்.ஜே.ரி.அபேவர்தன**
தலைவர் (நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்)

**திரு. எஸ். திசாநாயக்க**
அங்கத்தவர் (நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்)

**திருமதி. எஸ். பாலசூரிய**
செயலாளர் (உதவிப் பொது முகாமையாளர் - நீதி / சபைச் செயலாளர்)

### திறைசேரி உறுப்பினர்கள்

**திரு. வி.எம்.அமீன்**
பணிப்பாளர் (ஜூலை 2010 முதல் மார்ச் 2013 வரை)

**திரு. எஸ்.ஏக்கனாயக்க**
பணிப்பாளர் (ஏப்ரல் 2013 முதல் ஆகஸ்ட் 2013 வரை)

**திரு. எச்.ஜீ.சுமனசிங்க**
பணிப்பாளர் (ஒக்டோபர் 2013 முதல் இன்று வரை)

## அவதானிப்பாளர்கள்

உள்ளகக் கணக்காய்வாளர்
கணக்காய்வாளர் நாயகத் திணைக்கள பிரதிநிதி

குழுவானது 2013ஆம் ஆண்டில் 4 முறை சந்தித்தது. தேவையேற்படும் போது கணக்காய்வுக் குழுவின் அழைப்பின் பேரில் பொது முகாமையாளரும் பிரதம நிதியியல் அலுவலரும் கூட்டங்களுக்கு வருகையளித்தனர். ஏனைய முகாமைத்துவ அதிகாரிகள் தேவையினடிப்படையிலும், மேலதிக விளக்கங்களுக்காகவும் அழைக்கப்பட்டனர்.

## பொறுப்புக்கள் மற்றும் வகிபாகம்

கணக்காய்வுக் குழுவானது இணக்கப்பாட்டுக்கும் செயற்பாட்டுக்குமிடையாலான சமநிலையைப் பேண சபைக்கு ஒத்துழைத்தது. குழுவின் நோக்கமானது நிதிக்கூற்றுகளின் நேர்மைத்தன்மை, கட்டுப்பாட்டின் வினைத்திறன் மிக்க விளைவு மற்றும் உள்ளகக் கணக்காய்வாளர்களின் நோக்கத்தையும் சுதந்திரத்தையும் உறுதிபடுத்துவதும் ஆகும்.

குழுவானது நிதிக் கூற்றுக்கள் மற்றும் பல்வேறு அறிக்கைகளை மீளாய்வு செய்து தேவைக்கேற்ப உரிய பரிந்துரைகளை மேற்கொள்ளும். அவற்றின் நேர்மையான அளிக்கைகள் மற்றும் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் பொழுது ஏற்றுக் கொள்ளப்படும் குறிப்பிடத்தக்க கணக்கியல் கொள்கைகள் ஆகியவற்றிலும் கவனஞ் செலுத்தும்.

குழுவானது உள்ளகக் கணக்காய்வு அறிக்கை, வெளியகக் கணக்காய்வு அறிக்கை, தீர்க்கப்படாத பிரச்சனைகள் மற்றும் தேவையான சிபாரிசுகளை மீளாய்வு செய்கிறது. ஓவ்வொரு கூட்டத்திலும் எடுக்கப்பட்ட குறிப்புகள் மேலும் சபை மட்டத்திலே மீளாய்வு செய்வதற்காக சபைக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

உள்ளகக் கட்டுப்பாடுகளின் பெறுமதி மற்றும் பொதுவான சூழல் கட்டுப்பாட்டின் முன்னேற்றத்தை உறுதிப்படுத்துவதற்கு உள்ளகக் கணக்காய்வு சிபாரிசுகளின் நடைமுறைப்படுத்தலின் முன்னேற்றம் ஒழுங்காக குழுவால் பின்பற்றப்படுகின்றது.

அதிகமான சுதந்திரத்தை வைத்திருப்பதற்கு உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடானது முன்னனி கணக்காய்வு நிறுவனத்துக்கு ஒப்படைக்கப்படுகின்றது. கணக்காய்வு சிபாரிசுகள் சரியாக செயற்படுகின்றனவா என்பதை தீர்மானிக்க பின்தொடரப்படவேண்டிய மீளாய்வுகள் அட்டவணைப்படுத்தப்படுகின்றது.

குழுவானது ஆண்டிலே தனது கடமைகளையும் பொறுப்புக்களையும் வெற்றிகரமாக எடுத்துச் செல்வதற்கு தகவல்களையும் ஒத்துழைப்பையும் முகாமைத்துவத்திடமிருந்து மீளாய்வு செய்கின்றது.

## அவதானம்

செய்கைகள் திருப்திகரமாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைகளுடன் பொருந்துமாறு நடைபெறுகின்றது என்பது தொடர்பில் சபையினுடைய செயற்பாட்டுக் கட்டுப்பாடுகள் மற்றும் கணக்கியல் கொள்கைகள் நியாயமான உத்தரவாதத்தை வழங்குகின்றது என்பதில் கணக்காய்வுக் குழு திருப்தி அடைகின்றது.

R. Abeyawardena

ஆர்.ஜே.ரி.அபேவர்தன
தலைவர்
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு
தேசிய லொத்தர் சபை
30 ஏப்ரல் 2013
கொழும்பு.

# கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

எப்பீஆர்2/ஏ/எள்எல்பீ/1/13/3

2015 பெப்ரவரி 19

## தலைவர்
## தேசிய லொத்தர் சபை

**தேசிய லொத்தர் சபையின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

தேசிய லொத்தர் சபையின் 2013 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக்கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு 1971 இன் 38ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1963இன் 11ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11(ஆ) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்ந்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம், ஒரு விபரமான அறிக்கை சபையின் தலைவருக்கு 2014 ஒக்தோபர் 20 ஆந் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுகளிலிருந்து விடுபட்ட நிதிகூற்றுகளைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்படுகளைத் தீர்மானித்தல் மற்றும் அமுல்படுத்துதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிகூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுகளிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் சீராக்கப்படுமாயின் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள நிதிகூற்றுகளிலுள்ள பல மூலதாரங்கள் பொருண்மையாகப் பாதிக்கப்படலாம்.

## 2 நிதிக்கூற்றுக்கள்

### 2.1 பாதகமான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக தேசிய லொத்தர் சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிகூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ)
சபையினால் சீட்டிழுப்பு நடாத்தி பெறப்படுகின்ற வருமானத்தில் மீளாய்வாண்டில் ஒன்றிணைந்த நிதியத்திற்கு அனுப்பப்பட்ட ரூபா 1,753,135,197 தொகையான பணம் விற்பனைக் கிரயமாக நிதிக்கூற்றுகளில் சீராக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் மொத்த இலாபம் அந்த அளவினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ)
பரிசுகளைப் பெறுவதற்காக வெற்றிப்பெற்றவர்கள் முன்வராத போது பரிசுப் பணம் சபையின் நிதியத்தில் செலவு வைக்கப்பட்டதன் பின்னர் திறைசேரிக்குச் செலுத்த வேண்டிய போதிலும் சபையால் முன்னைய ஆண்டுகளைப் போன்றே மீளாய்வாண்டின் போதும் சீட்டிழுக்கப்பட்டு ஆறு மாதங்களை விஞ்சியிருந்தும் பரிசைப் பெறுததற்காக வெற்றிப்பெற்றவர் முன்வராத ரூபா 247,738,070 தொகையான பரிசுப்பணம் சபையின் நிதியத்தில் செலவு வைக்கப்படாமல் திறைசேரிக்கு நேரடியாகச் செலுத்தப்பட்டிருப்பதுடன் அத்தொகை நிதிகூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ)
லொத்தர் சீட்டிழுப்பிற்காக நிதிரீதியற்ற பரிசு வழங்கப்பட்டமையின் காரணமாக சபையால் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட ரூபா 8,850,393 தொகையான நிறுத்தி வைத்தல் வரித்தொகை பரிசிற்கான ஒதுக்கங்களின் கீழ்க்கணக்கு வைப்பதற்குப் பதிலாக நிதிச்செலவீனத்தின் கீழ்க்கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ)
மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு சபையின் நடமாடும் விளம்பரப் பிரிவில் ஒரு உத்தியோகத்தரின் பொறுப்பில் காணப்பட்ட விற்பனைப் பெறுமதி ரூபா 7,707,160 தொகையான லொத்தர் சீட்டுக்கள் கடன் விற்பனையாக கணக்கு வைக்கப்பட்டமையினால் விற்பனை வருமானம் மற்றும் கடன்பட்டோர் பெறுமதி அந்த அளவினால் அதிகரித்துக் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ)
சபைக்குரிய அநுராதப்புர சுற்றுலா விடுதியின் நிர்மாண செயற்பாடுகளுக்காக 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளின் போது தனியார் ஒப்பந்தகாரருக்கு சபையினால் செலுத்தப்பட்ட ரூபா 8,072,087 தொகையான முற்பணம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ)
2013 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளவாறு 02 வருடங்களை விஞ்சிய அறவிடப்படாது காணப்பட்ட கடன்பட்டோர் மீதிகளின் பெருமதி ரூபா 3,992,562 ஆக இருந்ததுடன் 1999 மற்றும் 2004 ஆம் வருட கால எல்லைக்குரிய மூன்று விற்பனை முகவர்களால் வழங்கப்பட்டு மதிப்பிழந்த 09 காசோலைகளுக்காக அறவிடவேண்டிய ரூபா 714,298 தொகையான மீதி காணப்பட்டது.

(இ)
சபையால் லொத்தர் விற்பனை முகவருக்கு கடன் அடிப்படையில் வழங்கப்பட்ட சைக்கிள் மற்றும் லொத்தர் கூடாரங்களுக்காக 2013 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டிய ரூபா 10,129,401 தொகையான மீதியில் ரூபா 5,693,536 தொகை 2012ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முன்னுள்ள ஆண்டுகள் முதல் அறவிடப்படாது காணப்படுகின்ற கடன் மீதி அவதானிக்கப்பட்டது.

(ஈ)
“கொழும்பு விமான நிலைய சுபிரி வாசனா சம்பத லொத்தர்” சீட்டிழுப்பை நடாத்துவதற்காக விமான நிலைய அபிவிருத்தி அதிகாரசபைக்கு சபையினால் 2008 ஆம் ஆண்டு முதல் 2013ஆம் ஆண்டு வரை செலுத்த வேண்டிய ரூபா 12,000,000 தொகை மீளாய்வாண்டு இறுதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள்

காணக்காய்வின் போது பின்வரும் இணங்காமை சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1997 இன் 35ஆம் இலக்க நிதி (திருத்திய)அதிகாரச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1963 இன் 11ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் | |
| (i) 14(2) மற்றும் 17(1) (அ) பிரிவு | பரிசுக்காக ஒதுக்கப்பட்ட தொகையில் (அ) பிரிவு வெற்றி தடவைக்குரிய பரிசுத் தொகை கழிக்கப்பட்டடு எஞ்சிய தொகை மாத்திரம் பரிசு ஒதுக்கக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக சபையினால் நிறுத்தி வைக்கப்பட்ட இலாபத்தில் ரூபா 301,800,000 தொகைப் பரிசு ஒதுக்கக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. |
| (ii) 14(2) மற்றும் 17(2) | பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரிவு லொத்தர் வருமானத்தில் உரிய அமைச்சுச் செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட செலவின அளவு மாத்திரம் கழிக்க முடியுமான போதிலும் மீளாய்வாண்டில் ஏற்பட்ட செலவினத்திற்காக அவ்வாறான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (iii) 20(2)(1) பிரிவு | பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் லொத்தர் நடாத்துவது தொடர்பாக விதிகளைத் தயாரித்து விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்று வர்த்தமானியில் பிரசுரிக்காமல் சம்பத் ரேகா மற்றும் மெகா 50 மில்லியன் லொத்தர் நடாத்தி ரூபா 1,964,171,400 தொகை விற்பனை வருமானமாக உழைக்கப்பட்டிருப்பதுடன் அதில் ரூபா 1,023,591,494 தொகையை பரிசுக்காக ஒதுக்குவதற்கும் ரூபா 367,997,582 தொகையை விற்பனை முகவருக்கான தரகினச் செலுத்துவதற்கும் செலவிடப்பட்டிருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | |
| (i) xxiv ஆம் அத்தியாயத்தின் 11 ஆம் பிரிவு | 2005 சனவரி 01 ஆந் திகதி முதல ஆதனக் கடன் வழங்குதல் வங்கிகளின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் சபையினால் மேற்கூறப்பட்ட திகதி தொடக்கம் மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரை ரூபா 125, 672, 534 தொகையான ஆதனக் கடன் சபையின் நிதியைப்பயன்படுத்தி உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. |
| (ii) xxiv ஆம் அத்தியாயத்தின்பிரிவு 11.4.1 ஆம் பிரிவு | 2005 சனவரி 01 ஆம் திகதிக்கு முன்னர் ஆதனக் கடனாக 5 வருட மாதாந்த சம்பளம் ஆகக்கூடியதின் கீழ் கடன் பெற்ற உத்தியோகத்தர்களினால் மேற்கூறப்பட்ட திகதியின் பின்னர் இந்தப் பிரிவை பிழையாக விளங்கிக் கொண்டு 07 வருட மாதாந்த சம்பளம் மற்றும் தாங்கள் முன்னர் பெற்ற ஆதனக் கடன் தொகை என்பவற்றிற் கிடையேயுள்ள வேறுபாடு ஆதனக்கடனாகப்பெறப்பட்டிருந்தது. 2009 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு இறுதிவரை 55 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 19,073,496 கூட்டுத் தொகையான கடன் பணம் வழங்கப்பட்டிருந்தது. |
| (iii) xxiv ஆம் அத்தியாயத்தின உத்தியோகத்தரிடமிருந்து 11.5.1 ஆம் பிரிவு | ஆதனக்கடனாக அறவிட வேண்டிய வட்டி பெறப்பட்ட கடனின் அடிப்படையில் 4,8 மற்றும் 11 சதவீதப்படியாக இருக்கவேண்டிய போதிலும் சபையினால் சகல ஆதன கடனும் 4 சதவீதமான ஆகக் குறைந்த வட்டி வீதத்தின் கீழ் வழங்கப்பட்டிருந்தன. |
| (iv) xxiv ஆம் அத்தியாயத்தின் 11.2.2 ஆம் பிரிவு | நிரந்தர சேவைக் காலம் 5 வருடங்களைப் பூர்த்தி செய்யாத இரண்டு உத்தியோகத்தர்களுக்கு ரூபா 2,223,380 கூட்டுத் தொகையான ஆதனக்கடன் வழங்கப்பட்டிருந்தது. |

| | |
|---|---|
| (இ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/2ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபம் | |
| (i) 9.7 ஆம் பந்தி | திறைசேரி அங்கீகாரம் பெறப்படாது லொத்தர் சீட்டிழுப்பை நடாத்துவதற்காக சமூகமளிக்கின்ற உத்தியோகத்தர்களுக்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் முன்னைய ஆண்டுகளைப் போன்றே மீளாய்வாண்டின் போதும் 9,900,700 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (ii) 9.12 ஆம் பந்தி | (i) திறைசேரி அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமல் முன்னைய ஆண்டுகளைப் போன்றே மீளாய்வாண்டின் போதும் நலன்புரிச் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையின் படி தலைவரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் பதவியணியினருக்கு நலன்புரிப் படியாக ரூபா 10,511,041தொகை செலுத்தப்பட்டிருந்தது.<br><br>(ii) சபையின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சபையின் உத்தியோகத்தர்களுக்கு ரூபா 12,040,000 கூட்டுத்தொகையான பணம் பரிசாக பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. திறைசேரி அங்கீகாரம் பெற்றுக்கொள்ளும் போது வழங்கப்பட்ட பரிசு விபரங்கள் மற்றும் அவற்றின் பெறுமதி போன்ற விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றுநிருபம் மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபம் | சுற்றுநிருபத்தின் படி திறைசேரி அங்கீகாரம் பெற்றுகொள்ளப்படாமல் பணிப்பாளா சபையின் அங்கீகாரத்தில் முன்னைய ஆண்டுகளைப் போன்றே மீளாய்வாண்டின் போதும் ஊக்குவிப்புப்படியாக ரூபா 64,263,101 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (உ) 2006 இன் அரசாங்க கொள்வனவு கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 1.3.2 ஆம் வழிகாட்டி | மீளாய்வாண்டிற்குரிய சகல சம்பத் ரேகா லொத்தர் சீட்டுக்களும் மீளாய்வாண்டின் ஒக்தோபர் 23 ஆந் திகதி வரை சீட்டிழுக்கப்பட்ட மற்றைய சகல லொத்தர் சீட்டுக்களும் கொள்வனவு நடைமுறைகளின்றி தெரிவு செய்யப்பட்ட வழங்குனரின் மூலம் அச்சிடப்பட்டு ரூபா 217,556,830 கூட்டுத் தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஊ) 2011 பெப்ரவரி 9ஆந் திகதிய 13/2008 (iv) ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றுநிருபம | உத்தியோகப்பூர்வ வாகனம் உரித்தான 09 உத்தியோகத்தர்களுக்கான செலுத்த வேண்டிய மாதாந்த எரிபொருள் படி எல்லையினை விஞ்சி அந்த உத்தியோகத்தர்களுக்காக ரூபா 2,532,727 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (எ) 2010 ஆகஸ்ட் 24 ஆந் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களச் சுற்றுநிருபம் | சபையின் ஒரு உத்தியோகத்தரின் ஆரம்ப அடிப்படைச் சம்பளப் படி நிலை ரூபா 25,640 ஆக இருந்த போதிலும் அதற்கு முரணாக 2009 பெப்ரவரி 16 ஆந் திகதி முதல் ரூபா 32,870 தொகையான ஆரம்ப படி நிலையில் வைத்து சம்பளம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதுடன் அதன் பிரகாரம் 2009 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 414,120 தொகையான சம்பளம் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஏ) 2011 பெப்ரவரி 11 ஆந் திகதிய 57 ஆம் இலக்க பொது முயற்சிகள சுற்றுநிருபத்தின் 6(iii) மற்றும் (iv) ஆம் பந்திகள் | 46,167,803 கூட்டுத்தொகையான அனுசரணை மற்றும் பரிசுச் செலவினம் தொடர்பாக மேற்கூறப்பட்ட ஏற்பாடுகளின் படி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமா்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டிற்கான சபையின் நிதி விளைவு ரூபா 133, 406,928 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 312,190,960 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 445,597,888 தொகை அல்லது 143 சதவீத வீழ்ச்சியைக் காண்பித்தது. மீளாய்வாண்டில் சாதகமான வருமான முரணான ரூபா 2,478,106,194 உடன் ஒப்பிடும் போது நிருவாக செலவினம் மற்றும் வரிச் செலவினங்களின் பாதகமான முரண்கள் ரூபா 2,923,704,082 ஆனமை நிதி விளைவுகளின் வீழ்ச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 3.2 நிறுவனத்திற்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட விடயங்கள்

சபையால் சேவையிலிருந்து அகற்றப்பட்ட ஒரு ஊழியா் ரூபா 3,000,000 நட்டஈடு கோரி தொழில் நியாய சபையில் வழக்குத் தொடுத்திருந்ததுடன் தனக்கு ஏற்பட்ட அபகீா்த்தி தொடா்பாக ரூபா 50,000,000 தொகையான நட்டஈடு கோரி வெளிநபா் ஒருவரினால் சபைக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல் தரவுகள்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 03 ஆண்டுகளில் சபையின் முக்கியமான செயற்பாட்டு விடயங்கள் தொடா்பான விபரம் பின்வருமாறு.

| விபரம் | 2013 ரூ | 2012 ரூ | 2011 ரூ | 2010 ரூ |
|---|---|---|---|---|
| வருமானம் | 14,537,362,545 | 12,004,268,616 | 10,092,330,623 | 8,862,869,826 |
| ஏனைய | 220,209,583 | 275,197,318 | 178,866,138 | 212,424,233 |
| வருமானம் | 459,877,814 | 393,049,086 | 376,528,826 | 293,504,383 |
| அச்சிடல் கிரயம் | 1,010,422,751 | 618,985,298 | 496,428,627 | 470,189,405 |
| செலவினம் | 247,527,709 | 222,844,221 | 203,294,269 | 203,535,560 |
| ஊழியா் ஊதியம் ஒன்றிணைந்த நிதியத்திற்குப் பங்களிப்புச் செய்தல் | 1,753,135,197 | 1,574,149,137 | 1,345,046,907 | 1,173,460,051 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் விளம்பரச் செலவினம் 115% சதவீதத்தினால் அதிகரித்திருந்த போதிலும் அதற்கு நேரொத்த வருமானத்தின் அதிகரிப்பு 64 சதவீதமாக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் விளம்பரச் செலவினம் 63 சதவீதத்தால் அதிகரித்திருந்த போதிலும் வருமானத்தின் அதிகரிப்பு 21 சதவீதமாக இருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) சபையால் மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் மேற்கொள்ளப்பட்ட விற்பனை, விளம்பரம் மற்றும் விநியோகித்தல் செலவினங்களின் கூட்டுத்தொகையை விற்பனை வருமானத்துடன் ஒப்பீடு செய்தபோது முன்னைய ஆண்டின் விற்பனை, விளம்பரம் மற்றும் விநியோகித்தல்கள் ஒரு ரூபாவிற்கும் ரூபா 18.52 விற்பனை வருமானம் உழைக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் அப்பெறுமதி ஒரு ரூபாவிற்கு ரூபா 14.04 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகின்ற போது ஒரு ரூபா விளம்பரச் செலவினத்தால் உழைக்கப்பட்ட விற்பனை வருமானம் ரூபா 4.84 இனால் வீழ்ச்சியடைந்திருந்தது. இதன் படி மேற்கொள்ளப்பட்ட விளம்பர செயற்பாடுகளின் வெற்றிகரத்தன்மை தொடா்பாக கேள்விக்குரியதாக இருந்தது.

## 4.2 முகாமைத்துவ செயற்றினின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் 50 ஆவது ஆண்டு நிறைவின் நிமித்தம் மீளாய்வாண்டில் சந்தைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட மெகா 50 மில்லியன் லொத்தரின் மீளாய்வாண்டில் நடாத்தப்பட்ட இரண்டு சீட்டிழுப்பிற்குரிய தகவல்கள் பின்வருமாறு.

| விபரம் | மெகா 50 மில்லியன் சீட்டிழுப்பு தடைவ 1 ரூபா | மெகா 50 மில்லியன் சீட்டிழுப்பு தடைவ 2 ரூபா | மொத்தம் ரூபா |
|---|---|---|---|
| லொத்தர் வருமானம் | 279,174,000 | 236,230,600 | 515,404,600 |
| பரிசுக்கான ஒதுக்கம் (வருமானத்தில் 58 சதவீதம்) | 161,920,920 | 137,013,748 | 298,934,668 |
| பரிசுத் தொகை | 181,579,300 | 147,630,391 | 329,209,691 |
| பரிசு வழங்குவதற்காக ஒதுக்கக் கணக்கிலிருந்து பெறப்பட்ட பணம் ஒன்றிணைந்து | 19,658,380 | 10,616,643 | 30,275,023 |
| நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்ட பங்களிப்பு (வருமானத்தில் 10 சதவீதம்) | 27,917,400 | 23,623,060 | 51,540,460 |

அதன் பிரகாரம் சபையினால் நடாத்தப்படுகின்ற ஏனைய லொத்தர்களின் விற்பனை வருமானத்தில் 47 சதவீத்திற்கும் 49 சதவீதத்திற்கும் இடையிலான அளவில் பரிசுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் போது “மெகா 50 மில்லியன் லொத்தரின் பரிசுக்காக 58 சதவீதம் ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும், லொத்தரின் இரண்டு சீட்டிழுப்புகளுக்குரிய விற்பனை வருமானத்தில் 64 சதவீதம் பரிசாகச் செலுத்தப்படடிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் சம்பத் ரேகா லொத்தர் நாடாத்தியமையினால் சபை ரூபா 1,448,766,800 தொகையான வருமானத்தை உழைத்திருந்ததுடன் அந்த வருமானத்தில் ரூபா 72,438,340 தொகை அதாவது 5 சதவீதம் மாத்திரம் ஒன்றிணைந்த நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது. மொத்த வருமானத்தில் 4.75 சதவீதம் அதாவது ரூபா 68,816,423 தொகை சபையின் செலவினங்களைத் தீப்பதற்கு 25.75 சதவீதம் அதாவது ரூபா 373,057,451 தொகை ஐம்பதாவது ஆண்டு நிறைவு நிதியச் செலவினங்களை தீர்ப்பதற்காகவும் ஒதுக்கப்பட்டிருந்தன.

(இ) சபையின் லொத்தர் சீட்டுக்களை அச்சிடுவதில் பின்வரும் செயற்திறன் இன்மைகள் அவதானிக்கப்பட்டன.

(i) சபையால் சீட்டிழுக்கப்படுகின்ற கொவி செத, ஜாதிக சம்பத, சுபிரி வாசானா சம்பத மற்றும் வாசானா சம்பத லொத்தர்களுக்குரிய சீட்டுக்கள் கொள்வனவு நடைமுறைகளின் படி வழங்குனர் தெரிவு செய்யப்படாமல் 1995 ஆம் ஆண்டில் சீட்டுக்களை வழங்கிய தனியார் கம்பனியிலிருந்தே 2013 ஒக்தோபர் 23 வரை அச்சிடப்பட்டிருந்தது. கணக்காய்விற்கு கிடைக்கக்கூடிய தகவல்களின் படி முன்னைய 5 ஆண்டுகளிலும் மீளாய்வாண்டின் ஒக்தோபர் 23 வரையிலும் அவ்வாறு கொள்வனவு நடைமுறைகளின்றி அச்சிடப்பட்ட லொத்தர் சீட்டுக்களில் பெறுமதி ரூபா 1, 003,068,565 ஆகும்.

(ii) அச்சிடல் நடவடிக்கைகளுக்காக புதிய வழங்குனரை தெரிவு செய்வதற்கு சபையினால் 2011 ஒக்தோபர் 31 ஆந் திகதி கேள்வி கோரப்பட்ட போதிலும் வழங்குனரைத் தெரிவு செய்வதற்காக 2 வருட காலம் எடுத்திருந்தது. கேள்வி கோரப்பட்டிருந்தும் வழங்குனரைத் தெரிவு செய்தல் தாமதமாகியமையினால் சபைக்கு ஏற்பட்ட கணிப்பிடக்கூடிய நட்டம் பின்வருமாறு இருந்தது.

| விபரம் | கொள்வனவு நடைமுறைகளின்றி வழங்கப்பட்ட சீட்டுகளின் கிரயம் ரூபா 0.5661 இன் பிரகாரம் செலவு ரூபா | வழங்கப்பட்ட சீட்டுக்களின் கிரயம் ரூபா 0.537 இன் பிரகாரம் செலவு ரூபா | நட்டம் ரூபா |
|---|---|---|---|
| 2011 ஒக்தோபர் 31இல் கூறுவிலை கோரப்பட்டு 2012 சனவரி 01ஆந் திகதியில் உள்ளவாறு வழங்குனரை தெரிவு செய்திருந்தால் 2013 ஒக்தோபர் 23 இல் உள்ளவாரான நிலைமை | 352,715,366 | 334,584,264 | 18,131,102 |
| 2011 ஒக்தோபர் 31 இல் கூறுவிலை கோரப்பட்டு 2013 சனவரி 01 இல் உள்ளவாறு வழங்குனரைத தெரிவு செய்திருந்தால் 2013 ஒக்தோபர் 23இல் உள்ளவாரான நிலைமை | 174,094,997 | 165,145,758 | 8,949,239 |

## 4.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பணிப்பாளர் சபையின் அங்கீகாரமின்றி ரூபா 1,054,348,000 கூட்டுத் தொகையான சுரண்டும் லொத்தர் விசேட சீட்டிழுப்புக்குரிய லொத்தர் சீட்டுக்கள் மீளாய்வாண்டின் போது கடன் அடிப்படையில் முகவர்களுக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தன. அந்த கடன் விற்பனைகளிலிருந்து ரூபா 75,353,610 தொகையான கடன் விற்பனைக்காக எவ்வித பிணையும் பெறப்படாதிருந்ததுடன் ரூபா 15,198,728 தொகையான விற்பனைகள், பிணை எல்லையினை விஞ்சி மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டிய ரூபா 98,940,951 தொகையான கடன் மீதி ரூபா 38,130,804 ஆக இருந்தது. எவ்வாறாயினும் கடன் அடிப்படையில் முகவருக்கு சீட்டுக்களை விற்பனைக்கு வழங்குதல் தொடர்பான முறையான திட்டம் சபையினால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் சபையின் விளம்பரச் செலவினங்கள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) விற்பனை விளம்பரப்படுத்தலின் கீழ் அனுசரணையாளர்களுக்கு மானியங்களை வழங்கும் விடயங்களைத் தெரிவு செய்தல் மற்றும் அவைகளுக்கு வழங்குகின்ற நிதி அளவினை தீர்மானிக்கும் அளவுகோல்கள் அல்லது முறையான திட்டம் சபையினால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டின் போது ரூபா 959,275,274 தொகையான விளம்பர நிகழ்ச்சித் திட்டத்திற்காக செலவினம் செய்யப்பட்ட போதிலும் 2011 பெப்ரவரி 11ஆந் திகதிய 57ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்திலிருந்து பெறப்பட்டிருக்கவில்லை.

(iii) அனுசணையாளர்களுக்காக கொடுப்பனவு செய்யும் போது எதிர்பார்க்கப்பட்ட விளம்பரம் மேற்கொள்ளப்பட்டமைக்க சபையால் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட உரிய பிரதேசத்தின் வலய முகாமையாளரின் சிபாரிசு மற்றும் உள்ளபடியாக விளம்பரம் மேற்கொள்ளப்பட்டதை உறுதிப்படுத்தப்படாமல் ரூபா 2,288,500 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(iv) முன்னைய ஆண்டினைப் போலவே மீளாய்வாண்டின் போலும் வடக்கு கிழக்கில் உடைக்கப்பட்ட வணக்கஸ்தலங்களை மீள்நிர்மாணம் செய்வதற்காக ரூபா 10 மில்லியன் ஒதுக்கப்பட்ட போதிலும் அதற்கான எத்தொகையும் செலவிடப்பட்டிராததுடன் உரிய நோக்கத்திற்குப் புறம்பாக அந்த நிதிஏற்பாடு வேறு விளம்பர நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்டிருந்தது.

(இ) கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் சீட்டிழுப்பிற்காக அச்சிடப்பட்ட ரூபா 714,783,300 தொகையான சீட்டுக்களுக்கிடையே விற்பனை செய்யப்படாத சீட்டுக்களின் எண்ணிக்கை 85,055,730 ஆக இருந்தது. அந்த சீட்டுகளின் அச்சிடல் பெருமதி ரூபா 54.7 மில்லியனாக இருந்தது.

(ஈ) 2013 சனவரி 01 இல் உள்ளவாறு கட்டிட ஒதுக்கக் கணக்கில் ரூபா 853,842,734 மீதி காணப்பட்டவுடன் இலக்கிடப்பட்ட செயற்பாடுகளுக்காக பயன்படுத்தாமல் ரூபா 301,800,000 பரிசு ஒதுக்க நிதியத்திற்கும் எஞ்சிய தொகையான ரூபா 552,042,734 நிறுத்தி வைக்கப்பட்ட இலாபத்திற்கும் மீளாய்வாண்டின் போது மாற்றப்பட்டு கட்டிட ஒதுக்க கணக்கு தீர்க்கப்பட்டிருந்தது.

## 4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கள்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையினால் லொத்தர் சீட்டுக்களை விற்பனை முகவர்களுக்கு விநியோகிப்பதற்காக விநியோகஸ்தர்களுக்கு ஒரு சீட்டுக்கு 20 சதப்படி தரகுப் பணம் செலுத்தப்படுவதுடன் விநியோகஸ்தர்களினால் 21,084,569 லொத்தர் சீட்டுக்கள் விற்பனை முகவர்களுக்கு விநியோகிக்கப்படாமல் நேரடியாக விற்பனை செய்யப்பட்டிருந்தன. எனினும் சபையால் அந்த சீட்டுக்களை விநியோகிப்பதற்காகவும் மேற் கூறப்பட்ட வீதத்தை அடிப்படையாக கொண்டு ரூபா 4,216,914 தரகுப் பணம் விநியோகிப்பாளர்களுக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) கொள்வனவு வழக்காட்டிக் கோவையின் வழிக்காட்டியின் பிரகாரம் முறையான உடன் படிக்கையில் கைச்சாத்திடாமல் தனியார் இணையத்தளங்களில் சபையின் அடையாளப் பெயரை காட்சிப் படுத்துவதற்காக மீளாய்வாண்டின் போதும் ரூபா 9,113,280 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(இ) கொள்வனவு வழிக்காட்டிக் கோவையின் பிரகாரம், திறந்த போட்டிக் கூறு விலைகள் கோரி வழங்குனரைத் தெரிவு செய்யாமல் சபையினால் தெரிவு செய்யப்பட்ட வழங்குனரிடமிருந்து ரூபா 43,461,833 பெருமதியான 76,774,126 சம்பத் ரேகா லொத்தர் சீட்டுக்கள் 2012 ஆம் ஆண்டில் ஒக்தோம்பர் மாதம் மீளாய்வாண்டின் இறுதி வரை அச்சிடப்பட்டிருந்தது.

(ஈ) அரசாங்க கொள்வனவு வழகாட்டிக் கோவையின் 2.3.2(ஈ), 2.6.1(அ)(ii) மற்றும் 5.6 ஆம் பந்திகளின் படி, முன்னர் தயாரிக்கப்பட்ட வடிவம் ஒன்று இன்றி கேள்விதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட மாதிரியின் பரிசோதனையுடன் மாத்திரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு வழங்கிய சிபார்சினை அடிப்படையாக கொண்டு ரூபா 9,980,200 பெறுமதியான 278,000 சாவி நிறுத்திகள் சபையினால் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. கொள்வனவு வழக்காட்டி கோவையின் 3.3 ஆம் பந்தி பிழையாக விளங்கப்பட்டு வழிகாட்டு கோவையின் கூறுவிலைகள் கோரப்பட்ட போட்டியாளர் கேள்வி கோரலின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(உ) முறையான வகையில் வடிவம் தயாரிக்கப்படாமல் கேள்வி கோரப்பட்டமை கேள்வி கோரும் போது சமர்ப்பிக்கப்பட்ட மாதிரி மற்றும் கட்டளையின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட வழங்கள்களின் நியமத்தை தொழிநுட்ப நிறுவனத்தின் மூலம் பரிட்சிக்கப்படாமையினால் சபையால் மீளாய்வாண்டின் போது ரூபா 1,777,500 தொகை செலவிடப்பட்டு பதவியணியினரின் சீருடைக்காக குறைந்த தரத்தையுடைய, 1ரூபா 3,950 படியான 450 சேலைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

## 4.5 விளைவற்ற மற்றும் குறைவாக பயன்படுத்தப்படுட சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) சபையினால் “சிரம வாசனா” மற்றும் “சுவசெத” லொத்தருக்காக பேணப்படுகின்ற வங்கி நடைமுறைக் கணக்குகளில் முறையே ரூபா 1,708,286 தொகை 2011 ஏப்ரல் மாதம் தொடக்கமும் ரூபா 122,778 தொகை 2011 யூன் மாதம் தொடக்கமும் மீளாய்வாண்டின் இறுதி வரையும் விளைவற்றுக் காணப்பட்டன.

(ஆ) மெகா 5 மில்லியன் லொத்தரின் 2வது சீட்டிழுப்பின் போது பரிசாக 40 ஜீப் வண்டிகள் ஒதுக்கப்பட்ட போதிலும் சீட்டிழுக்கும் போது 28 ஜீப் வண்டிகள் மாத்திரம் வெல்லப்பட்டிருந்தது. சபையினால் 40 ஜீப் வண்டிகள் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தமையினால் ரூபா 25,178,568 பெருமதியான 12 ஜீப் வண்டிகள் 2014 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் விளைவற்றுக் காணப்பட்டது.

## 4.6 ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட சபையின் வளங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்று நிரூபத்தின் 8.3.9 ஆம் பந்தியின் பிரகாரம், சபைக்குச் சொந்தமான வளங்கள் வரிசை அமைச்சு அல்லது ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு பயன்பாட்டிற்காக முடியாத போதிலும் அதற்கு முரணாக சபையினால் 3 வாகனங்கள் 2006ஆம் ஆண்டு முதல் ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அந்த வாகனங்களின் பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்புச் செலவீனமாக மீளாய்வாண்டின் போது சபை ரூபா 610,721 தொகையை செலவிட்டிருந்தது.

(ஆ) சபையிலிருந்து சம்பளம் பெறுகின்ற 03 உத்தியோகத்தர்கள் வெளி நிறுவனங்களுக்காக 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டு முதல் விடுவிக்கப்பட்டிருப்பதுடன் மீளாய்வாண்டில் அந்த மூன்று உத்தியோகத்தர்களுக்கும் ஊழியர் ஊதியமாகச் செலுத்தப்பட்ட ரூபா 1,131,833 தொகையை மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.7 பதவியணியினர் நிருவாகம்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 293 மாத்திரமாக இருந்த போதிலும் சபையால் 313 பதவியணியினர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் 09 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருக்குப் புறம்பாக ஒப்பந்த அடிப்படையில் 29 பேர் சேர்கப்பட்டிருந்தனர்

## 5. பதவியணியினர் நிருவாகம்

## 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட செலவவினம் மற்றும் உள்ளப்படியான செலவினங்களுக்கிடையே மறை 6 சதவீதம் முதல் நேர் 900 சதவீதம் வரையான வீச்சில் கவனத்தில் கொள்ளக் கூடிய முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கப்பூர்வமன முகாமைத்துவ கருதியாக ஈடுபடுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5.2 கொள்வனவுத் திட்டம்

சபையினால் மீளாய்வாண்டிற்காக கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அரசாங்க கொள்வனவு வழகாட்டி கோவையின் வழிகாட் 4.2 இன் பிரகாரம் சபையின் சகல கொள்வனவுகளும் அதில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5.3 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டுகளின் போது மேலதிகமாகச் செலுத்தப்பட்ட ரூபா 7,392,287 தொகையான ஊழியர் பணிக்கொடைப் பணத்தை சபைக்கு மீள அறவிடுமாறு அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவினால் 2013 மார்ச் 21 ஆந் திகதி கட்டளையிடப்பட்ட போதிலும் அத்தொகையை அறவிடுவதற்கோ அல்லது பெற வேண்டிய தொகையாக நிதிக்கூறுகளின் காண்பிக்கப்படவே இல்லை. மேலதிகமாகச் செலுத்தப்பட்ட பணிக்கொடைப் பணத்தை சபைக்கு மீளளிப்புச் செய்யப்படுமென உரிய ஓய்வுப்பெற்ற உத்தியோகத்தர்களுக்கு எழுத்து மூல அறிவித்தல் மாத்திரம் சபை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) 2005ஆம் ஆண்டு முதல் சபைக்குரியதாகக் காணப்பட்ட கொழும்பு நகரை அண்மித்த பகுதியில் 112 பேர்ச் காணியில் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு சபையினை நடாத்தி செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் தலைமை அலுவலகத்தை நடாத்திச் செல்வதற்கும் களஞ்சியத்தை நடாத்திச் செல்வதற்கும் 2 வாடகைக் கட்டிடங்கள் பயன்பட்டிருந்தன. தலைமை அலுவலகம் நடாத்திச் செல்லப்படுகின்ற கட்டிடம் 1999 ஆம் ஆண்டு முதல் வாடகை அடிப்படையில் பெற்றிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அதற்காக ரூபா 1,368,880 தொகை செலுத்தப்பட்டிருந்தது. களஞ்சிய வசதியைப் பெற்றுக்கொள்வதற்காக கொழும்பு நகரை அண்மித்த பகுதியில் கட்டடமொன்று பலவருடங்களுக்கு முன்பிருந்து வாடகை அடிப்படையில் பெறப்பட்டிருப்பதுடன் மீளாய்வாண்டின் போது அதற்காக ரூபா 1,521,880 வாடகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. மேலும், களஞ்சியம் அமைந்துள்ள கட்டிடத்தை வாடகைக்கு பெற்றதற்குரிய எழுத்துமூல உடன்படிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறையான கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பட்டுக் குறைப்பாடுகள் அவ்வப்போது சபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

அ) கணக்கீடு
(ஆ) மனித வள முகாமைத்துவம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) செலவின முகாமைத்துவம்



ஒப்பம் : டபிள்யூ.பீ.சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)

# வருமானக்
## கூற்று

| டிசம்பர் மாதம் 31ஆம் திகதி நிறைவடைந்த ஆண்டுக்கானது | கவனிக்க | 2013<br>ரூ | மீள குறிப்பிட்டப்பட்டது 2012<br>ரூ |
|---|---|---|---|
| வருமானம் | 2 | 14,537,362,245 | 12,004,268,616 |
| கழி: விற்பனைச் செலவு | 3 | 12,709,585,791 | 10,584,753,723 |
| **மொத்த இலாபம்** | | **1,827,776,754** | **1,419,514,893** |
| ஏனைய வருமானம் | 4 | 220,209,583 | 275,197,318 |
| | | 2,047,986,337 | 1,694,712,211 |
| கழி: செலவுகள்<br>விநியோகச் செலவுகள் | 5 | 24,635,220 | 29,173,702 |
| நிர்வாகச் செலவுகள் | 6 | 388,743,935 | 346,831,633 |
| ஏனைய செலவுகள் | 7 | 1,120,735,313 | 710,817,388 |
| நிதிச் செலவுகள் | 8 | 37,190,847 | 26,094,291 |
| **வரிக்கு முன்னரான இலாபம்** | | **476,681,022** | **581,795,198** |
| வருமான வரிச் செலவு | 9 | 610,087,950 | 269,604,238 |
| **ஆண்டுக்கான இலாபம் (நட்டம்)** | | **(133,406,928)** | **312,190,960** |

குறிப்பு 01ஐ பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கணக்கியல் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களின் குறிப்பின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பு: 2012 இல் பங்குக் கூற்றில் காண்பிக்கப்பட்ட திரட்டிய நிதியத்துக்கான பங்களிப்பு 2013ஆம் ஆண்டு வருமானக் கூற்றில் அனுமதிக்கக்கூடிய செலவு என்றவகையில் மீள கொண்டுவரப்பட்டுள்ளது. இதனடிப்படையில் ஒப்பிட்டுக்காக 2012 எண்ணிக்கைகள் மீளக் குறிப்பிடப்பட்டுள்ளன.

# தொகுக்கப்பட்ட

## வருமானக் கூற்று

| 31 டிசம்பரில் முடிவடைந்த ஆண்டுக்கானது | 2013 ரூ. | மீள குறிப்பிடப்பட்டது 2012 ரூ |
|---|---|---|
| டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கானது ஆண்டுக்கான இலாபம் (நட்டம்) | (133,406928) | 312,190,960 |
| ஆண்டுக்கான தேறிய வரிக்கான ஏனைய முழு வருமானம் (நட்டம்) கூட்டல்: மறுமதிப்பீட்டு சரக்குகளின் மீதான இலாபம் தங்க நாணயங்கள் | 1,342.522 | - |
| கூட்டல்: மறுமதிப்பீட்டு சொத்துக்கள் இயந்திரங்கள் மீதான இலாபம் | 263,640,924 | - |
| கூட்டல்: நாணயமாற்ற தளம்பல் மீதான ஆதாயம் | 245,524 | 7,825,409 |
| கூட்டல்: பணிக்கொடைக்கான மேவதிக ஒதுக்கீடு | 12,385,733 | - |
| ஆண்டுக்கான தேறிய வரிக்கான மொத்த முழு வருமானம் | 144,208,775 | 320,016,368 |

# நிதி நிலைமைக்

கூற்று

| | கவனிக்க | 2013 ரூ. | மீள குறிப்பிட்டட்டது 2012 ரூ. | 2012 ரூ. |
|---|---|---|---|---|
| சொத்துக்கள் | | | | |
| நடைமுறையல்லாத சொத்துக்கள் ஆதனம், இயந்திரம் மற்றும் உபகரணம் | 10 | 739,286,832 | 444,061,935 | 388,203,362 |
| மூலதனக் குறை வேலை கட்டிடம் | | - | 22,909,114 | 5,331,951 |
| திரட்டிய நிதியத்திலிருந்து வருமான வரிப் பெறுமதி | | 1,736,370,634 | 2,287,791,736 | 2,150,590,123 |
| இலங்கை சேமிப்பு வங்கி முதலீடு | | 5,336,575 | 5,336,575 | 5,336,575 |
| மொத்த நடைமுறையல்லாத சொத்துக்கள் | | 2,480,994,041 | 2,760,099,360 | 2,549,462,011 |
| நடைமுறைச் சொத்துக்கள் | | | | |
| பதிவேட்டுப் பொருட்கள் | 11 | 149,137,662 | 42,269,083 | 71,715,536 |
| வர்த்தக வருமதிகள் | 12 | 241,678,915 | 29,691,558 | 18,871,365 |
| பிற நடைமுறைச் சொத்துக்கள் | 13 | 702,043,808 | 672,198,617 | 188,596,931 |
| காசும் காசுக்குச் சமமானவைகளும் | 14 | 2,089,399,814 | 2,178,058,460 | 2,320,535,435 |
| மொத்த நடைமுறைச் சொத்துக்கள் | | 3,182,260,198 | 2,922,217,718 | 2,599,719,267 |
| மொத்த சொத்துக்கள் | | 5,663,254,240 | 5,682,317,079 | 5,149,181,278 |
| பங்குகள் மற்றும் பொறுப்புக்கள் பங்குடமையாளர்களுக்கு பங்குக் காரணம் கொள்ளக்கூடியது | | | | |
| தக்க வருவாய் | 15 | 435,775,890 | 531,283,063 | 542,656,501 |
| பங்குகளின் ஏனைய பகுதிகள் | 16 | 890,098,987 | 1,141,034,183 | 1,365,553,993 |
| மொத்தப் பங்குகள் | | 1,325,874,875 | 1,672,317,246 | 1,908,210,494 |
| நடைமுறையல்லாத பொறுப்புக்கள் | | | | |
| ஒத்திவைக்கப்பட்ட வரி | 17 | 10,319,839 | 6,608,391 | 14,787,878 |
| நீண்ட கால ஒதுக்கங்கள் | 18 | 1,761,554,939 | 2,325,688,239 | 2,194,088,341 |
| மொத்த நடைமுறையல்லாத பொறுப்புக்கள் | | 1,771,874,778 | 2,332,296,630 | 2,208,876,219 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | | | | |
| வர்த்தகம் மற்றும் செலுத்த வேண்டியவை | 19 | 1,771,698,128 | 1,049,276,958 | 976,784,731 |
| செலுத்த வேண்டிய நடைமுறை வரி | 20 | 793,806,460 | 628,426,245 | 55,309,834 |
| மொத்த நடைமுறைப் பொறுப்பு | | 2,565,504,587 | 1,677,703,203 | 1,032,094,565 |
| மொத்த பொறுப்புக்கள் | | 4,337,379,365 | 4,009,999,833 | 3,240,970,784 |
| மொத்த பங்குகளும் பொறுப்புகளும் | | 5,663,254,240 | 5,682,317,079 | 5,149,181,278 |

பக்கங்கள் 6 இலிருந்து 25 வரையான கணக்கியல் கொள்கைகள் மற்றும் குறிப்புக்ள நிதிக்கூற்றின் முக்கிய பாகத்தைக் கொண்டமைகின்றன. இந்நிதிக் கூற்றுக்ள தேசிய லொத்தர் சபையின் 31 டிசம்பர் 2013ஆம் ஆண்டுக்குரிய அலுவல்கள் மற்றும் 31 டிசம்பர் 2013ஆம் ஆண்டுக்கான இலாபம் பற்றிய உண்மையான இலாப (நட்டம்) பற்றிய உண்மையான, நியாயமான நிலையை வெளிப்படுத்துகின்றன.

**ஹர்ஷ பண்டார**
பிரதம நிதியியல் அலுவலர்

**வி.சுந்தரேஸ்வரன்**
பிரதி பொது முகாமையாளா

இந்நிதி நிலைமைக் கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் அளிக்கை பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும்.

**சமிந்த அதுளுவகே**
தலைவர்

**ஜானக ஸ்ரீ வர்ணசிங்க**
தொழிற்படும் பணிப்பாளர்

# காசுப் பாய்ச்சல்

கூற்று

31 டிசம்பரில் முடிவடைந்த ஆண்டுக்கானது

| | 2013<br>ரூ. | மீள குறிப்பிட்டபட்டது<br>2012<br>ரூ. |
|---|---|---|
| செயற்படு நடவடிக்கைகள் மூலமான காசுப்பாய்ச்சல் | | |
| வரிக்கு முந்திய இலாபம்வ | 476,681,022 | 581,795,198 |
| சரிசெய்தல்களுக்கானவை - தீர்வை மிகை மற்றும் திரட்டிய நியத்துக்கான வழங்கல் தொடா்பில் | | |
| மீளப்பெறப்பட்ட செஸ் - செவன மற்றும் சமுா்தி | - | 78,173,292 |
| சரிசெய்தல்களுக்கானவை - திரட்டிய திறைசேரிக்கான நிதி | - | (21,263,101) |
| சரிசெய்தல்களுக்கானவை - கட்டிட ஒதுக்கத்துக்கு மாற்றப்பட்டது | - | (235,000,000) |
| சரிசெய்தல்களுக்கானவை - திரட்டிய நிதியத்துக்கான பங்களிப்பில் தகவல் தொழினுட்பம் தொடா்பில் | - | 629,659,655 |
| சரிசெய்தல்களுக்கானவை - கொஎசுட் பதிவழிக்கப்பட்ட மீளப்பெறத்தக்க தீா்வை | (26,774,238) | - |
| சரிசெய்தல்களுக்கானவை - கட்டிட ஒதுக்கத்திலிருந்து திறைசேரிக்கு மாற்றப்பட்டது | 365,000,000 | |
| சரிசெய்தல்களுக்கானவை - கட்டிட ஒதுக்கத்திலிருந்து - வொக்ஸால் காணி மாற்றப்பட்டது | 187,042,734 | - |
| சரிசெய்தல்களுக்கானவை - பணிக்கொடைக்கான மேலதிக ஒதுக்கீடு தொடா்பில் | 12,385,733 | - |
| சரிசெய்தல்களுக்கானவை - நாணய மாற்ற தளம்பல் மூலமான ஆதாயம் | 245,524 | 7,825,409 |
| மறுமதிப்பீடு ஒதுக்க அதிகரிப்பு (குறைவு) | 264,984,446 | - |
| பரிசு ஒதுக்க அதிகரிப்பு (குறைவு) | 337,923,091 | 67,917,089 |
| கட்டிட ஒதுக்க அதிகரிப்பு (குறைவு) | (853,842,734) | 235,000,000 |
| திரட்டிய திறைசேரி நிதியம் அதிகரிப்பு (குறைவு) | - | 21,263,101 |
| பணிக்கொடை ஒதுக்கீடு அதிகரிப்பு (குறைவு) | (12,385,733) | - |
| மூலதன வேலை - குறைவேலை கட்டிடம் குறைவு (அதிகரிப்பு) | 22,909,114 | (17,577,163) |
| திரட்டிய நிதியத்துக்கான தகவல் தொழினுட்பம் தொடா்பில் பெறவேண்டியவை குறைவு (அதிகரிப்பு) | 551,421,102 | (137,201,613) |
| | | |
| சரிசெய்தல்களுக்கானவை | | |
| தேய்மானம் | 43,900,791 | 37,707,066 |
| பெசேவ மற்றும் தேகவ ஒதுக்கம் | 711,338,615 | 597,705,389 |
| ஆதனம், இயந்திரம், மற்றும் உபகரணத்தை அகற்றுவதற்கான இலாபம் | (6,144,211) | (2,363,892) |
| பதிவழிக்கப்பட்ட நிலையான சொத்து மற்றும் தேய்மானத்துக்கான தேறிய பெறுமதி | - | 2,929,971 |
| திரட்டிய நிதியத்துக்கான ஒதுக்கீடு | 1,753,135,197 | 1,574,149,137 |
| பரிசுகளுக்கான ஒதுக்கீடு | 7,083,652,537 | 5,787,269,625 |
| | 10,911,472,990 | 9,207,989,163 |
| செயற்படும் மூலதனத்தின் மாற்றங்கள் | | |
| இருப்புகளின் (அதிகரிப்பு) குறைவு | (106,868,579) | 29,446,453 |
| வா்த்தக வருமதிகளின் (அதிகரிப்பு) குறைவு | (211,987,356) | (10,820,193) |
| ஏனைய நடப்புச் சொத்துக்களின் (அதிகரிப்பு) குறைவு | (29,845,191) | (483,601,686) |
| வா்த்தகம், ஏனைய செலுத்த வேண்டியவை மற்றும் நீண்டகால ஒதுக்கங்கள் | 251,675,224 | (39,370,167) |
| செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலமான தேறிய காசுப் பாய்ச்சல் | 10,814,447,088 | 8,782,383,903 |
| முதலீட்டு நடவடிக்கைகள் மூலமான தேறிய காசுப் பாய்ச்சல் | | |
| சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணங்கள் | (75,978,081) | (96,495,609) |
| சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணங்கள் மீதான மீள்மதிப்பீட்டு ஆதாயம் | (263,640,924) | - |
| சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணங்களை அகற்றுதல் மீதான ஆதாயம் | 6,637,529 | 2,363,892 |
| முதலீட்டு நடவடிக்கைகள் மூலமான தேறிய காசுப் பாய்ச்சல் | (332,981,477) | (94,131,717) |
| நிதிசாா் நடவடிக்கைகள் மூலமான காசுப்பாய்ச்சல் | | |
| திரட்டிய நிதியத்துக்கு செலுத்திய கொடுப்பனவுகள் | (1,776,179,552) | (1,577,099,724) |
| திறைசேரிக்கான விசெட பங்களிப்பு | (500,000,000) | (702,000,000) |
| செலுத்தப்பட்ட பரிசுகள் | (6,589,862,236) | (5,751,196,978) |
| பணிக்கொடை கொடுப்பனவு | (326,465) | (5,601,715) |
| பெசேவ மற்றும் தேகவ | (681,423,198) | (587,778,448) |
| வருமான வரி மற்றும் ஒத்திவைக்கப்பட்ட வரிக் கொடுப்பனவு | (1,022,332,806) | (207,052,296) |
| நிதிசாா் நடவடிக்கைகள் மூலமான தேறிய காசுப்பாய்ச்சல் | (10,570,124,257) | (8,830,729,162) |
| குறித்த ஆண்டுகாலப்பகுதியில் காசும் காசுக்குச் சமமானவைகளின் தேறிய மாற்றங்கள் | (88,658,646) | (142,476,975) |
| ஆண்டின் தொடக்கத்தில் காசும் காசுக்குச் சமமானவைகளும் | 2,178,058,460 | 2,320,535,435 |
| ஆண்டு முடிவில் காசும் காசுக்குச் சமமானவைகளும் | 2,089,399,814 | 2,178,058,460 |
| காசுப்பாய்ச்சல் கூற்றுக் குறிப்பு | | |
| காசும் காசுக்குச் சமமானவைகளும் | 2013 | 2012 |
| குறுங்கால முதலீடுகள் | 1,589,431,447 | 1,904,415,947 |
| கையிலிருக்கும் காசும் வங்கியிலிருக்கும் காசும் | 499,968,366 | 273,642,513 |
| ஆண்டு முடிவில் தேறிய காசும் காசுக்குச் சமமானவைகளும் | 2,089,399,813 | 2,178,058,460 |

# உரிமை முதலிலான
## மாற்றங்கள்

| 31 டிசம்பரில் முடிவடைந்த ஆண்டுக்கானது | திரட்டிய திறைசேரி நிதியம் ரூ. | மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் ரூ. | கட்டிட ஒதுக்கம் ரூ. | பரிசுகள் ஒதுக்கம் ரூ. | வருமான ஒதுக்கம் ரூ. | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 01/01/2012 இல் மீதி | - | - | 618,842,734 | 746,711,260 | 542,656,501 | 1,908,210,494 |
| பரிசுகளின் ஒதுக்கத்தில் தேறிய மாற்றம் | - | - | - | 67,917,089 | - | 67,917,089 |
| பொது திறைசேரிக்கான விசேட வரி | - | - | - | (548,700,000) | - | (548,700,000) |
| திரட்டிய நிதிக்கான மாற்றம் | 21,263,101 | - | - | - | (21,263,101) | - |
| தீர்வை மிகை மற்றும் திரட்டிய நியத்துக்கான வழங்கல் | | | | | | |
| தொடர்பில் மீளப்பெறப்பட்ட செஸ் - செவன | - | - | - | - | 71,971,545 | 71,971,545 |
| தீர்வை மிகை மற்றும் திரட்டிய நியத்துக்கான வழங்கல் | | | | | | |
| தொடர்பில் மீளப்பெறப்பட்ட செஸ் - சமுர்தி | - | - | - | - | 6,201,747 | 6,201,747 |
| திரட்டிய நிதிக்கான விசேட பங்களிப்பு | - | - | - | - | (153,300,000) | (153,300,000) |
| நடப்பாண்டு இலாபத்தில் இருந்து கட்டட ஒதுக்கத்துக்காக மாற்றப்பட்டது | - | - | 35,000,000 | - | (35,000,000) | - |
| வருமான ஒதுக்கத்தில் இருந்து கட்டட ஒதுக்கத்துக்காக மாற்றப்பட்டது | - | - | 200,000,000 | - | (200,000,000) | - |
| பரிமாற்ற ஏற்ற இறக்கத்தின் இலாபம் | - | - | - | - | 7,825,409 | 7,825,409 |
| 2012 இற்கான இலாபம் / (நட்டம்) | - | - | - | - | 312,190,960 | 312,190,960 |
| 31/12/2012 இல் மீதி | 21,263,101 | - | 853,842,734 | 265,928,349 | 531,283,063 | 1,672,317,247 |
| பரிசுகளின் ஒதுக்கத்தில் தேறிய மாற்றம் | - | - | - | 36,123,091 | - | 36,123,091 |
| கட்டட ஒதுக்கத்தில் இருந்து மாற்றம் | - | - | (301,800,000) | 301,800,000 | - | - |
| கட்டட ஒதுக்கத்தில் இருந்து மாற்றம | - | - | (365,000,000) | - | 365,000,000 | - |
| கட்டட ஒதுக்கத்தில் இருந்து மாற்றம்-வொக்ஸ்ஹோல் நிலம் | - | - | (187,042,734) | - | 187,042,734 | - |
| திரட்டிய நிதிக்கான விசேட பங்களிப்பு | - | - | - | - | (500,000,000) | (500,000,000) |
| பணிக்கொடைக்கான மேலதிக ஒதுக்கீடு | - | - | - | - | 12,385,733 | 12,385,733 |
| கொளசுட் பதிவழிக்கப்பட்ட மீளப்பெறத்தக்க தீர்வை | - | - | - | - | (26,774,238) | (26,774,238) |
| மீள் மதிப்பீடு செய்யப்பட்ட பொருட்களின் மீதான இலாபம்-தங்க நாணயங்கள் | - | 1,343,522 | - | - | - | 1,343,522 |
| மீள் மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்கள் டியந்திரத் தொகுதி மீதான இலாபம் | - | 263,640,924 | - | - | - | 263,640,924 |
| பரிமாற்ற ஏற்ற இறக்கத்தின் இலாபம் | - | - | - | - | 245,524 | 245,524 |
| 2013 இற்கான இலாபம் /(நட்டம்) | - | - | - | - | (133,406,928) | (133,406,928) |
| 31/12/2013 இல் மீதி | 21,263,101 | 264,984,446 | - | 603,851,440 | 435,775,888 | 1,325,874,877 |

# கணக்கீடுகளுக்கான
## குறிப்புகள்

குறிப்பு இல-01

# முக்கியக் கணக்கியல் கொள்கைகள்

## 1.1.1. பொதுக் கணக்கீட்டு மரபு

நிதிக் கூற்றுக்கள் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் விதிக்கப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கும் தரங்களுக்கும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் விதிகளுக்கும் அமையத் தயாரிக்கப்பட்டுள்ளன. இவை நிதிக் கூற்றுக்களைப் பாதிக்கும் பணவீக்கக் காரணிகளுக்காகச் சரிக்கட்டல்கள் செய்யப்படாது வரலாற்றுச் செலவின அடிப்படையில் தொடர்ச்சியாகப் பிரயோகிக்கப்பட்டுள்ளன.

## 1.1.2. செவன லொத்தர்

செவன லொத்தர் 1997 நவம்பர் 07ஆம் திகதி முதல் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால் தேசிய லொத்தர் சபைக்கு ஒதுக்கப்பட்டள்ளது. செவன லொத்தரைத் தேசிய லொத்தர் சபைக்கு இணைப்பதற்குப் பதிலாக அது தேசிய லொத்தர் சபையின் உற்பத்திகளில் ஒன்றென இணங்காணப்பட்டு கணக்கீடும் அதற்கிணங்க மேற்கொள்ளப்படுகிறது. பொருத்தமானவிடத்து தேசிய லொத்தர் சபையின் நிதிக் கூற்றுக்களில் போதுமான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 1.1.3. நிதியாண்டு

நிதிக்கூற்றுக்கள் 2013 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த நாட்காட்டி ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்டுள்ளன.

## 1.1.4. ஒப்பீட்டுத் தகவல்

ஒப்பீட்டு நோக்கங்களுக்காக தேவையானவிடத்து முந்தைய ஆண்டின் தொகைகள் மீண்டும் தரப்பட்டுள்ளன.

## 1.2. பெறுமதி மதிப்பீட்டில் சொத்துக்களும் அடிப்படைகளும்.

## 1.2.1 சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணம்

சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணம் அவற்றின் கொள்விலையில் திரண்ட தேய்மானத்தைக் கழித்துக் கூறப்பட்டுள்ளது. சொத்துக்களின் செலவானது சொத்துக்களை அவற்றிலிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற பயனை அடைவதற்காக இயக்குவதற்கான செலவுடனான கையகப்படுத்துதல் மற்றும் கட்டுமான செலவாகும்.
வியாபாரத்தைத் தொடர்ந்து நடாத்துவதற்கு அல்லது வியாபாரத்தின் ஈட்டும் தன்மையை அதிகரிக்கும் நோக்கத்திற்காக நிலையான தன்மையையுடைய சொத்துக்களைக் கொள்வனவு செய்தல், விரிவுபடுத்தல் அல்லது மேம்படுத்தலுக்காக மேற்கொண்ட செலவுகள் மூலதனச் செலவுகள் எனக் கணிக்கப்பட்டுள்ளன.

## 1.2.2 குத்தகைச் சொத்து

குத்தகைக்குப் பெற்றுக்கொண்ட சொத்தின் பெறுமதி LKAS 17-குத்தகைக்கமைய பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இப்பெறுமதியானது எஞ்சியிருக்கும் குத்தகைக் காலப்பகுதி அல்லது அதன் பயனுள்ள வாழ்நாள் காலப்பகுதி இரண்டில் எது குறைவானதோ அதற்கிணங்க வகுக்கப்படுகிறது. நடைமுறையல்லாத சொத்தானது அநுராதபுரத்தில் அமைந்துள்ள குத்தகைச் சொத்தை உள்ளடக்கியுள்ளது. சபையானது 1986 ஆம் ஆண்டு 30 வருட குத்தகைக்கு எடுக்கப்பட்ட காணியில் விருந்தினர் விடுதியாக ஒரு கட்டிடத்தை அமைத்தது. 2013ஆம் ஆண்டு மற்றுமொரு விருந்தினர் விடுதி மன்னாரில் 30 ஆண்டு குத்தகைக்கு எடுக்கப்பட்ட காணியில் கட்டப்பட்டது. இதன் குத்தகையானது வருடாந்தம் புதப்பிக்கப்படவேண்டியது. மோட்டார் வாகனங்கள் மற்றும் சிலது அல்லாத நிலையான சொத்துக்கள் மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் LKS 16 இற்கமைய மீள் மதிப்பீடு செய்யப்பட்டன. ஆதாயமானது மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்துக்கு மாற்றப்பட்டது.

### 1.2.2.1. மீளமைப்புச் செலவினம்

தொடக்கத்தில் மதிப்பிடப்பட்ட செயற்பாட்டிலிருந்து எதிர்பார்க்கப்படும் எதிர்காலப் பொருளாதார நன்மைகளைப் பேணுவதற்காகச் சொத்து, இயந்திரம் மற்றும் திருத்தங்கள் அல்லது பேணுதல்கள் மேற்கொள்ளப்படும் பொழுது அவை செலவுகளாக ஏற்றுக் கொள்ளப்படும்.

### 1.2.2.2. தேய்மானம்

இறையிலி நிலம் நீங்கலாக சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட உபயோகமான பொருளியல் சீவிய காலத்துக்கும் மேலாக அத்தொகைகளை எழுத்தழிப்புச் செய்வதற்கென எல்லாச் சொத்துக்கள், பொறித்தொகுதியும் சாதனங்களும் அவற்றின் ஆகும் செலவு மதிப்பீடு என்பவற்றுக்கு நேர்கோட்டு முறையை உபயோகித்து தேய்மானத்துக்கான ஏற்பாடு கணிப்பிடப்படுகிறது. தேய்மானமானது அகற்றும் ஆண்டில் வழங்கப்படுகிறது.

எல்கேஏஸ் 16 இன் அடிப்படையில் நிலையான சொத்துக்கள் சரிபார்க்கப்பட்டு நிலையானச் சொத்துப் பதிவேட்டுடன் சமப்படுத்தப்பட்டு ஒவ்வொரு சொத்துக்கும் புதிய எண்கள் வழங்கப்பட்டன. சிதைவுற்ற நிலையான சொத்துக்கள் அடையாளங்காணப்பட்டு கணக்குப் புத்தகங்களில் பதிவழிக்கப்பட்டன. தற்போதைய நிகர பதிவழிக்கப்பட்ட பெறுமதியானது ரூ.739,286,832/- ஆகும்.

சொத்துக்களின் தேய்மான வீதங்கள் வருமாறு:

| சொத்துக்கள் | தேய்மானம் (%) |
|---|---|
| மோட்டார் வாகனங்கள் | 25 |
| கணினிகள் | 25 |
| காற்றுச் சீராக்கிகள், பொது மற்றும் அலுவலகச் சாதனம் | 20 |
| குலுக்கும் பீப்பாய்கள்/லொத்தர் சாதனம் | 20 |
| தளபாடங்களும் பொருத்திகளும் | 10 |
| கட்டடங்களும் மறைப்புகளும் | 05 |

பயனுள்ள சீவியம், எஞ்சியவற்றின் பெறுமானங்களும் சொத்துக்களின் தேய்மான முறைகளும் மீளாய்வு செய்யப்பட்டு தேவை ஏற்படுமிடத்து ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிலும், சீராக்கம் செய்யப்படுகின்றது. நிலையான சொத்து அழிப்பானது முறையே நிதிக்கூற்றுக்களில் கணிக்கு வைக்கப்பட்டுள்ளது.

30 ஆண்டுகளுக்கு குத்தகைக்குப் பெறப்பட்ட சொத்து (அநுராதபுர விடுதி) 2013ஆம் ஆண்டு முதல் எஞ்சியிருக்கும் நான்கு ஆண்டு காலப்பகுதிக்கு சமமான வகையில் வகுக்கப்பட்டுள்ளது. 30 ஆண்டுகால குத்தகைக்குப் பெறப்பட்ட மன்னார் விடுதியும் 2013ஆம் ஆண்டு முதல் சமமான வகையில் வகுக்கப்பட்டுள்ளது.

### 1.2.3. பொருட்பதிவேடுகள்

கொள்வனவு விலையில் பதிவேட்டுப் பொருட்கள் மதிப்பிடபடுகின்றன. கொள்விலை முதல் வந்து முதற் சென்றது அடிப்படையில் தீர்மானிக்கப்படுவதுடன் அவை தற்போதைய இடத்துக்கும் நிலைக்கும் கொண்டு வருவதற்கான கொணர்வு விலையையும் பிற இடர்நேர் செலவுகளையும் உள்ளடக்கும். மேலும், தங்க பதிவேட்டுப் பொருட்கள் சந்தை விலையில் பெறுமதியிடப்பட்டு கணக்கிடப்பட்டுள்ளன.

### 1.2.4. வர்த்தக வருமதிகள் மற்றும் ஏனைய நடப்புச் சொத்துக்கள்

கடன்பட்டோர்கள், அவை கிடைக்கக்கூடிய தொகைகளிற் குறிப்பிடப்படடுள்ளன. அறவிடமுடியாக் கடன்களுக்கும் ஐயக்கடன்களுக்கும் போதுமான ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஏனைய வருமதிகளும் நிலுவைகளும் கொள்விலையிற் குறிப்பிடப்பட்டுள்ளன.

### 1.2.5 காசும் காசுக்குச் சமனானவைகளும்

1.2.5.1. பெறுமதியின் மாற்றங்களின் முக்கியத்துவமற்ற ஆபத்துக்களுக்கு அமைய கையிலுள்ள காசு, கேள்வி வைப்புகள் மற்றும் குறுகிய கால அதி திரவத்தன்மையிலான, அறியப்பட்ட தொகைக்கு உடனடியாக மாற்றக்கூடிய முதலீடுகளும் காசும் காசுக்குச் சமமானவைகள் என வரையறை செய்யப்படும்.

1.2.5.2. திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள், திறைசேரி முதலீடுகள் மற்றும் வங்கி நிலையான வைப்புகளாகிய குறுகிய கால முதலீடுகள் கொள்விலையிலும் ஐந்தொகைத் திகதியில் கிடைக்க வேண்டிய வட்டியையும் சேர்த்து குறிப்பிடப்பட்டுள்ளன. அனைத்து முதலீடுகளும் குறுகிய காலத்துக்குரியனவாகக் கருதப்படுகின்றன.

## 1.3. பொறுப்புகளும் ஒதுக்கீடுகளும்

### 1.3.1. பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் பொழுது கணக்கீடு செய்யப்பட்ட அறியப்பட்ட அனைத்துப் பொறுப்புக்களும்.

### 1.3.2 நடைமுறைப் பொறுப்புக்கள்

ஐந்தொகையில் நடைமுறைப் பொறுப்புக்கள் என வகைப்படுத்தப்பட்டு, கோரப்படும் பொழுது செலுத்தப்பட வேண்டிய அல்லது நிதி நிலைமைக் கூற்று திகதியிலிருந்து ஓராண்டு காலப்பகுதிக்குள் செலுத்தப்பட வேண்டியவை பொறுப்புக்கள் ஆகும்.

### 1.3.3. நடைமுறையல்லாத பொறுப்புக்கள்

